ரிஜிஸ்டர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

# புரட்சி.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ஸு பங்குனி-மீ 5-உ (18—3—1934) | மலர் 17.

## "மதக்கொடுமையும் மக்கள் வறுமையும்"

(கொழும்பு தோழர் ஏ. எல். முஹம்மத் தமீம்)

(கந்தா காருண்யனே என்ற மெட்டு)

பல்லவி.

கொடுமை, மதக்கொடுமை கூறமிகக்கடுமை [கொ]

அநுபல்லவி.

(1) மடமையே குடிகொண்ட மத
மௌட்டீகர்களின் வஞ்சத்தால்
கடுமையாகவே ஏழைகள் மிகக்
கஷ்டப்படுகின்றார் பஞ்சத்தால்

பல்லவி யெடுப்பு.

அடிமை அடிமைத்தனம் இதுமடமைத்தனம் [கொ]

(2) கொஞ்சமேனும் கருணையற்ற
கொடிய மதங்களின் தொல்லையால்
சஞ்சலப்படும் மாந்தர்கள் துயர்
தவிர்த்திடுவதற்கில்லையே.

ப—யெ.

நெஞ்சம் பதைக்குதையா பஞ்சம் வதைக்குதையா [கொ]

(3) கடவுள் ஒருவரிருந்திடில் அதால்
கவலை நமக்கென் சொல்லுவீர்
படமுடியாத்துயரத்தால் மக்கள்
பரதவிப்பதேன் வில்லுவீர்

ப—யெ.

கடவுளிருந்தாலன்றோ கவலை தீருமன்றோ [கொ]

(4) மோசம் போனோமிதுவரையும்
முற்றிலும் மூடபக்தியால்
ஈசனொருவனிருந்திடிலேனோ
இதை யறிந்திடான் சக்தியால்

ப—யெ.

நீசமிகுந்த ஆட்சி மோசமான சூட்சி [கொ]

(5) மதங்களை விளம்பரஞ் செய்யும்
வைதீகர் ஆவேசத்தால்
நிதந்தவறுது உலகில்
நிகழ்ந்திடும் பெரும் யுத்தத்தால்

ப—யெ.

சதமின்றிவாடி தவிக்கின்…

(6) போரில் மாண்…
பொல்லாத …
பாரில்தமீம் …
பார்ப்பீரே … …க்

(12)

நேரில் காணும் சே…

## குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

ஈ. வெ. ரா. சொற்பொழிவு
விலை அணா 2.

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு
விலை அணா 2.

சோதிடப் புரட்டு
விலை அணா 2.

பர்னார்ட்ஷா உபந்யாசம்
விலை அணா 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணா.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை | 0—6—0 |
| மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ... | 2—0—0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை ... ... | 0—6—0 |
| சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |
| சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| பகுத்தறிவு கீதம் ... | 0—1—0 |

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகப் ஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்ற
லாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை
ன்றும் 8 அணாவுக்குக் குறைந்த
மாட்டாது. ஆர்டர்களுக்கு
ப்பவேண்டும்.

பாத்த
மாலைகள்.
ச முதல்வருஷத்திலிருந்து
குடி அ
சென்ற வருஷம்
ரியான மலர்களைத்தனித்
தனி வருஷங்களை
ாகவைக்கப்பட்டிருக்கிறது
ஒவ்வொரு வருஷ
ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு
ம் ரூ. 4—0—0
மா
த்தகாலயம், ஈரோடு.


ஏழு தலைமுறைகளாய்க் கையாண்டனுபவம் வாய்ந்ததும் வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்புப் பெற்றதுமான ஔஷதங்கள் எங்களுடையது.

ஆப்ரேஷன் அவசியமில்லை

# நாகபற்பம்.

சாப்பிடுங்கள் (மூலவியாதிக்கு)

எவ்விதமான மூலரோகமாயிருந்தாலும் சரி. எமது பற்பம் குணப்படுத்தும். முளை தானே கரையும். சீழ்மூலம் ரத்த மூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதி சீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம்.

புட்டி 1க்கு ரூ. 4.

## தாளக பஸ்பம்.

(இருமலுக்கு)

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம் கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயினும் சரி எட்டுவிதகாசமும் தீரும்.

புட்டி 1க்கு ரூ. 4.

## அப்ரேக் செந்தூரம்.

(நீரழிவுக்கு)

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்துத்தாகத்தை நிறுத்தி இரத்த விருத்தியைத்தரும்.

டி 1க்கு விலை ரூ. 15. வி. பி. வேறு.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S.I.



மணம் நிறைந்தது! குணம் உயர்ந்தது!!

இதைச் சாப்பிடுங்கள்.

காபி, ஓவல், டீ, கொக்கோ முதலான பானத்திற்குப்பதிலாக அநேகவிதமான மூலிகையின் வேர், பூ, வித்து வகைகளால் தயார் செய்யப்பெற்றுள்ள

## சுகானந்த பானச் சூரணம்.

ஒன்றே யாவராலும் விரும்பத்தக்கது. வெட்டைச்சூடு, நீரழிவு, நீர்க்கடுப்பு, காமாலை, சோகை, அஜீரணம், பலஹீனம் ஆகிய வியாதிகளை அடியோடு போக்கி இரத்த சுத்தி, ஞாபகசக்தி சுறுசுறுப்பு இவைகளை பூரணமாகத்தரத்தக்கது.

காலை மாலை இரண்டு வேளைகளிலும் மற்ற பானங்களைப் போன்றே உபயோகிக்கலாம். இதனை ஒருமுறை வாங்கி சாப்பிடுங்கள்.

1-டப்பியின் விலை அணா 10.

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் உண்டு.

விலாசம்:— தெக்ஷிணாமூர்த்தி தமிழ் வைத்தியசாலை
திருக்கோஷ்டியூர், (ராமநாதபுரம் ஜில்லா.)

## பயிரிடும் பாட்டாளிக்கும் பயிரிடாத முதலாளிக்கும் தங்களுக்கும் துரைத்தனத்தார் செய்யக்கூடிய உதவி.

(தோழர் C. D. நாயகம்)

தங்களுக்கும், துரைத்தனத்தார் செய்யக்கூடிய உதவி பயிரிடாத நில முதலாளி தன் நிலத்தைப் பயிரிடும் பாட்டாளிக்கு விற்று விடுவதால் தனக்கும், பிறருக்கும் செய்யக் கூடிய நன்மையை 11—3—34ல் "புரட்சி"யில் வெளிவந்த கட்டுரையில் விளக்கினேன். இச்செயலால் துரைத்தனத்தாருக்கு வரக்கூடிய நன்மையையும் குறிப்பாகச் சொன்னேன். அதை இதில் விரிவாக விளக்குகிறேன்.

பயிரிடும் பாட்டாளி தன்னிடமுள்ள நிலத்தைப் பயிரிடாமல் போட்டிருப்பதைக் காண முடியாது. எப்பாடு பட்டாயினும் அதில் பயிரேற்றி விடுவான். அவன் நோய் வாய்ப்பட்டிருந்தாலும் வெளியிடம் போய் இருந்தாலுங்கூட அவன் மனைவி மக்கள் பயிர் செய்து விடுவார்கள். தண்ணீர் தட்டு முதலிய குறைகளால் பயிர் சாவியாய்ப் போயிற்று என்று கேட்பதும் அரிது. பயிரேறாதிருப்பதும், பயிர் சாவியாய்ப் போவதும், பெரும்பான்மை பயிரிடாத முதலாளிகளிடமுள்ள நிலங்களில்தான். மேற்சொன்ன இரு காரணங்களால்வரியைத் தள்ளவோ, வரியைக் குறைக்கவோ நில முதலாளிகளிடமிருந்துதான் துரைத்தனத்தாருக்கு விண்ணப்பங்கள் வந்து குவிகின்றன. வரிப்பளு தாங்கமுடியவில்லை என்ற கூச்சலும், நில முதலாளிகளிடமிருந்தே தான் கிளம்புகிறது. நில முதலாளிகளால் துரைத்தனத்தாருக்கு நில வரி வரும்படி குறையவும் நிலவரித் தொல்லைகள் அதிகமாகவும் இடமாகிறது. இந்நிலங்கள் பயிரிடும் பாட்டாளிகளிடம் இருந்தால் துரைத்தனத்தாருக்கு ஏற்பட்ட நில வரியும் குறையாது வந்து சேரும். வரிப்பளு என்ற கூக்குரலும் ஓயும். சென்ற மாத இறுதியில் சென்னை சட்டசபையில் வரியைக் குறைக்கவேண்டுமென்ற பேச்சு நடக்கையில் அதை எதிர்த்துப் பேசிய தோழர் ரெட்டைமலை சீனிவாசன் சட்டசபையில் இதையே வற்புறுத்திப் பேசினார்.

நிலம் தரிசாகக் கிடந்து விடுவதாலும், பயிர் சாவியாகி விடுவதாலும், விளைச்சல் மேனி குறைந்து விடுவதாலும், நாட்டின் மொத்த விளைவு குன்றி, அகவிலை அதிகப்பட இடமாகும். இவ்வதிக விலையினால் துரைத்தனக் கைதிகளையும், பட்டாளத்து ஆட்களையும், கால் நடைகளையும், உணபிக்கத் துரைத்தனத்தார் வாங்க வேண்டிய விளை பொருள் விலைச் செலவு அதிகமாகும். இவ்வாண்டில் இந்திய துரைத்தனச் செலவில் பட்டாளச் செலவு குறைந்ததற்கு முக்கியகாரணங்களுள் ஒன்று உணவுப்பொருள் விலை குறைந்தது என இந்திய துரைத்தனப் பொருளாதார மந்திரி சென்ற வாரத்தில் இந்திய சட்டசபையில் எடுத்துச் சொன்னது நான் மேலே சொன்னதையே உறுதிப்படுத்துகிறது. உணவுப் பொருளின் விலை அதிகமாவதால் துரைத்தனத்தார் தங்கள் ஊழியக்காரர்களுக்குக் கொடுக்கும் சம்பள விகிதமும் அதிகமாகி அவ்வழியிலும் செலவு பெருகும். சென்ற சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாக அகவிலை உயர்வால் துரைத்தன ஊழியச் சம்பளச் செலவு கூடிக் கொண்டே போனதும் இப்பொழுது அகவிலை குறைய, அதுவும் குறைந்து வருவதும் மேலே சொன்ன கோட்பாட்டையே விளக்குகிறது. விலைநிலங்கள் முழுவதுமாவது, அவற்றுள் பெரும்பாகமாவது, பயிரிடும் பாட்டாளிகளிடமிருந்தால் நாட்டின் விளைவு பெருகி, உணவுப் பொருள்களின் விலை குறைந்து துரைத்தனக் கைதிகள், பட்டாளங்கள் இவர்களின் உணவுச் செலவும், துரைத்தன ஊழியச் சம்பளச் செலவும் குறைந்து துரைத்தன மொத்தச் செலவும் குறைய இடமாகும்,

பயிரிடுபவர்களிடம் நிலம் இருப்பதால் வரிவரும்படி கூடவும், செலவு குறையவும் வரிப் பளுவைப்பற்றிய கூக்குரலுக்கு விடை சொல்வதில் கழிக்கவேண்டிய நேரத்தை மற்றத் துரைத்தன மேம்பாட்டில் கழிப்பதற்கும் இடமாகும். ஆகையால் முதலாளிகளிடமுள்ள நிலங்களைப் பயிர்த்தொழிலாளிகளிடம் போகச் செய்வது துரைத்தனத்தாரின் முக்கிய கடமைகளுள் ஒன்றும். அவர்கள் அவ்வழியில் செய்யக் கூடிய எளிய வழி இரண்டுளது.

நன்செயிலும், புன்செயிலும் பயிரிடும் தொழிலாளி ஒருவனுக்கு வேண்டிய உச்ச நில அளவு எவ்வளவு என நிர்ணயித்துக்கொண்டு, அதற்கு மேற்படாத நிலமுள்ள பயிர்த் தொழிலாளியின் நிலத்தின்மேல் வரி இல்லாமற் செய்வதொன்று. ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்த வரும்படியின்மேல் வருமான வரி இல்லையென்ற சட்டத்தின் கோட்பாட்டையே நில வரும்படியிலுங் கையாளுவதே, மேலே சொன்ன கோரிக்கையின் கருத்தாம். இதில் பயப்படக்கூடிய, அல்லது தள்ளிவிடவேண்டிய கோட்பாடு ஒன்றும் இல்லை. வருமானம் உயர உயர வருமானவரி விகிதமும் உயர்வதுபோல ஒருவரிடமுள்ள நில அளவு உயர உயர நிலவரி விகிதமும் உயர்வது முற்றும் பொருத்தமாகும். இவ்வேற்பாட்டினால் துரைத்தனத்தாருக்கு வரவேண்டிய மொத்த வரி வரும்படி எவ்வழியிலும் குறைந்துவிடாது. தரிசாகக் கிடக்கிற நிலங்கள் பயிருக்கு வருவதாலும், சாவி, மேனிக் குறைவு என்ற காரணங்களுக்காகக் குறைக்கப்பட்ட வரிவசூல் கூடி வருவதாலும், வரிவசூலின் மொத்த வரும்படியில் குறைவிராது.

துரைத்தனத்தார் உதவக்கூடிய இன்னொரு வழி, மேலே சொன்னபடி நிர்ணயிக்கப்பட்ட உச்ச அளவுக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் அந்த உச்சஅளவுக்குமேற்போகாத நிலம்வாங்கினால் அதற்குப் பத்திரச் செலவும், பதிவுச் செலவும், இல்லாமற் செய்வதும் அந்த அளவுக்குமேல் நிலம் உள்ளவர்கள் புதிய நிலம் மீண்டும் வாங்கினால், அதற்கு பத்திரச் செலவும், பதிவு செலவும் கூட்டி விதிப்பதும் ஆகும். இதிலும் தாறுமாறான கொள்கையொன்றும் இல்லை, கூட்டுறவுச் சங்கங்களில் எழுதப்படுகிற அடமானம், கிறையம் முதலியவைகளுக்குப் பத்திரக் கூலியும், பதிவு கூலியும் இல்லை என்ற சென்ற 20-ஆண்டுகளாக நடைபெற்று வரும் கொள்கையைத்தான் இக்குறைந்த பயிர்த் தொழிலாளிகளுக்கும் உதவ வேண்டப்படுகிறது.

இவ்வாறு செய்வதால், முதலாளிகள் நிலங்கள் பயிரிடுவோருக்குப் போய், முதலாளிக்குக் கிடைத்த நிலவிற்று முதல் வேறு தொழிலுக்கும் போய், தொழில் வரியும், வருமான வரியும் பெருகித் துரைத்தனத்தாருக்கு வரும்படி கூடவும் இடமாகிறது. அந்நில விற்று முதல் தொழிலுக்குப் போகாமல் கூட்டுறவுச் சங்கங்களிலோ, தபாலாபீசிலோ துரைத்தனக் கடன்களிலோ போய்ச் சேருமானால் துரைத்தனத்தாருக்குக் குறைந்த வட்டியில் பெருந்தொகை சேரவும் இடமாகும். நாட்டில் துரைத்தனத்தார் மேலுள்ள கொந்தளிப்புங் குறைந்து நாளடைவில் நீங்கவும் இடமாகும்.

மேலே சொன்ன செய்முறையானது பயிர்த் தொழிலாளிகளுக்கும், பயிர் செய்யாத நில முதலாளிகளுக்கும் நன்மை செய்வதோடு துரைத்தனத்தாருக்கும் பலவழிகளில் நன்மை செய்வதுமாகும்.

---


வெளிவந்துவிட்டது!

வெளிவந்துவிட்டது!!

**சமயமும் விஞ்ஞான சாஸ்திரமும்.**

ஆக்கியோன்:

கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி.

தமிழில் இதுவரையிலும் வெளிவராத அரிய நூல். ஒவ்வொரு பகுத்தறிவுவாதியும் படிக்கவேண்டிய ஆராய்ச்சி நூல்.

விலை அணா 3.

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,

ஈரோடு.


---


**தொழிலாளர் "பண்டிகை" மே தினம் ஒன்றே.**

13—3—31 தேதியில் திருப்பத்தூரில் நடைபெற்ற இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டின் வரவேற்புத்தலைவர் தோழர் நா. பள்ளிகொண்டான் அவர்களின் வரவேற்புப்பிரசங்கம் வருமாறு:—

அன்புமிக்க தோழர்காள்!

சுயமரியாதை இயக்கம் தோழர். ஈ. வெ. ராமசாமி அவர்களால் சுமார் ஒன்பது ஆண்டுகட்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இன்று நாடு முழுதும் பரவி வருகிறது. இயக்கத் தலைவரான தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சிறைப்பட்டிருக்கும் இந்நாளில் நமது இயக்க வேலைகளை முன்னிலும் ஊக்கமாகச் செய்து முடிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்

### ஏழையர் நிலைமை.

வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்துள்ள இந்நாளில் ஏழைகள் நிலைமையை எண்ணுங்கால் நெஞ்சம் திடுக்கிடுகிறது. குறைந்த கூலிக்கு மிகுந்த வேலை செய்கின்றனர். குடிசையிலிருக்கும் சிறுவன் முதல், தள்ளாத நிலையிலிருக்கும் கிழவன் வரை அனைவரும் பாடுபடவேண்டிய நிலைமையிலிருந்தும், வறுமை அவர்களை விட்டு அகன்றபாடில்லை. இவர்கள் விரும்புவது வயிற்றுக்குச் சிறிது கூழேயாகும். இந்நிலையில் நம் நாட்டில் வாழும் ஒரு சில பணக்காரர்கள் தங்கள் டாம்பீக வாழ்க்கைக்கென சில வேடிக்கைத் திருவிழாக்களையும், வீண் சடங்குகளையும் இவர்களிடையே புகுத்தி இன்னலுறச் செய்கின்றனர். அவற்றில் சிலவற்றைக் குறித்தல் நலமெனக் கருதுகிறேன்.

### வீண் சடங்குகள்.

மக்கள் அறிவிற்கு எவ்விதத்திலும் பொருத்தமற்ற ஆபாசச் சடங்குகள், பலவற்றுள் மிகவும் சிலாக்கியமானது மஞ்சி விரட்டு என்பதாகும். பகுத்தறிவற்ற மாட்டின் கழுத்தில் வேட்டி கட்டித் துரத்தி பகுத்தறிவுடைய மனிதன் பின்சென்று போராடுவது ஓர் வீரச்செய்கை என பலர் புகலுகின்றனர். மாடு பிடிக்கும் தொழிலில் வெற்றிபெற்றால், இவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் ஒரு அணு அல்லது இரண்டணுப்பெறும் சிறு வேட்டியேயாகும். இதற்காக உயிரை இழப்பவருமுண்டு. காலமெல்லாம் தொழிலாளி கஷ்டப்பட்டு உழைக்க அதன் பலனை பணக்காரரும், உயர்ந்த சாதியாரென்பவரும், கடவுளின் தூதரெனத் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளும் ஒரு கூட்டமும் பங்கிட்டுக் கொண்டு, தொழிலாளிகள் என்றும் தங்கள் காலடியை விட்டு விலகா வண்ணம் பலவழிகளிலும் முயன்று வருகின்றனர். தொழிலாளி போதிய கல்வி அறிவற்றவனதலால் தன் காலில் நிலைத்து நிற்க மாட்டாதவன் ஆகின்றான்.

### கலவி.

நாகரீகம் பரவிய பிறநாடுகளில் தொழிலாளருக்கென கல்விச் சாலைகள், வாசகசாலைகள் ஆகியன நியமித்து அந்நாட்டார் தொழிலாளர் மூட நம்பிக்கையைப் போக்க முயல்கின்றார்கள். ஆனால் நம் நாட்டுத் தொழிலாளிகளுக்கு முற்கூறிய வசதிகள் அளிக்காமல் அவர்கள் இன்னும் பின்னேக்கிச் செல்லத்தகுந்த முறையில் கருமம், தலைவிதி, முன் ஜென்மம் என்பனவாகிய மயக்க வசனங்களைச் சொல்லி ஏய்த்துவிடுகின்றனர். அதனால் தொழிலாளிகள் முதுகெலும்பில்லாப் புழுக்களைப்போல் நிமிர்ந்து நடக்கவும், வலியமையற்றவராகிவிட்டனர். அரசாங்கமோ, தொழிலாளர் விஷயமாய் எதும் கவனிப்பதில்லை. தேசீய விடுதலைக்கென ஏற்பட்ட காங்கிரசாலோ அன்றி தோழர் காந்தியாராலோ அவ்வேலையைச் செய்ய முடிந்ததாவென்றால் அதுவும் முடிந்த பாடில்லை. ஆனால் தொழிலாளர் கூட்டங்களில் பேசுங்கால் தோழர் காந்தியார் "நீ உன் வருணச்சிரம முறைப்படி உன் தகப்பன் செய்த வேலையைத்தான் செய்யவேண்டும். இல்லையேல் வருணம் கெட்டு விடுவதோடு நமது இந்து மதமும் அழிந்துவிடும்" எனக்கூறி மறைவாக மதப் பிரச்சாரம் செய்துவருகிறார்

தோழர். எஸ். நீலாவதி அம்மையார் திருச்சியில் கலப்பு மணத்தால் சாதியும் வருணமும் அழிந்துவிடாதா என்று கேட்ட கேள்விக்கு "கலப்பு மணத்தாலோ, சமபந்தி போஜனத்தாலோ ஜாதி அழியாதென்றும்; ஒருவன் தன் தகப்பன் செய்த வேலைக்கு மாறுபட்டு வேறொருவன் வேலையைச் செய்தால் வருணச்சிரம தருமத்திலிருந்து கெட்டுவிடுவானென்றும்" கூறியிருக்கிறார். ஆனால் இங்கு நமக்கெழும் சந்தேகம் என்னவென்றால் பிரம்மகுலத் தோழர் இலட்சுமி அம்மாளுக்கும், வைசிய குலத் தோழர் தேவதாஸுக்கும் பிறக்கும் குழந்தை எந்த வருணத்தைச் சார்ந்தது என்பதாகும். அன்றியும் தகப்பன் தொழிலை மகன் கண்டிப்பாகச் செய்துதான் தீரவேண்டுமெனக் கூறுவது ஏழைத்தொழிலாளர்களை முன்னேறவிடாது தடை செய்வதாகும். எனவே, தோழர் காந்தியார் கூற்று நமக்கு முற்றிலும் மாறுபாடானதே.

## இராமநாதபுரம் ஜில்லா

# திருப்பத்தூர் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு

## திருப்பத்தூர்.

### வரவேற்புக்கழகத்தலைவர் தோழர்

## நா. பள்ளிகொண்டான் அவர்களின்

### வரவேற்புப் பிரசங்கம்.

அடுத்தபடியாக மதத்தலைவர்களாவது மக்கள் குறைகளை நீக்க முயன்றார்களா என்றால் அதுவுமில்லை.

### ஜமீன் குடிகள்.

இப்பகுதியிலுள்ள ஜமீன் குடிகளைப்பற்றும் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். ஜமீன்தார்கள் குடிகளின் நன்மையைச் சிறிதும் கவனியாத முறையில் நடந்துவருவது மிகவும் வருந்தத்தக்கதாகும். இந்நாட்டில் பயிரிடுவோருக்குப் போதிய வசதியில்லை. ஆற்றுக்கால் பாய்ச்சல் இல்லாத இவ்விடங்களில் தண்ணீர் இல்லாக்குறையால் சரியானபடி சாகுபடி செய்யமுடியவில்லை. ஜமீன்தார்களோ விளைந்தாலுஞ்சரி, விளையாது போனாலுஞ்சரி குடிகள் கஷ்டங்களைக் கொஞ்சமும் அறியாது வரி வசூல் செய்துவிடுகின்றனர்.

### தீண்டாமை.

இந்தியாவில் தீண்டாமைப் பேயின் படாடோபம் நமது ஜில்லாவில்தானென்று கூறும்பொழுது நாம் வெட்கப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இங்கு மனிதனை மனிதன் வேட்டையாடும்முறையும் இருந்து வருகிறது. சில நாட்களுக்கு முன்னர் நடந்த நாட்டார் இதிதிராவிடர் கலகத்தின்போது நடந்த கொடுமைகளை பத்திரிகை படிப்போர் யாவரும் மறந்திருக்க முடியாது. அப்படியிருக்க மீண்டும் நாட்டார் ஆதித்திராவிடர் கலகம் ஆரம்பித்திருப்பதைக் கண்டு நடுக்குறுகிறோம்.

### பெண்கள் நிலைமை.

பெண்களுக்கு ஆண்களைப் போன்ற சுதந்திரம் கொடுக்கப்படவில்லை. அவர்களை பள்ளிக்கூடங்களில் படிக்கவோ, பொதுக்கூட்டங்களுக்குச் செல்லவோ அனுமதிப்பதில்லை. அடுப்படியிலிருந்து ஆண் மக்களுக்கு வேண்டியவைகளைத் தயாரித்துக் கொடுப்பதே அவர்கள்தொழில். விதவைக் கொடுமையோ மிகவும் கொடிது. இதற்கெல்லாம் காரணம் இந்துப் பெண்களுக்கு சொத்துரிமை இல்லாததேயாகும். மேற்கூறிய குறைகளை நன்கு ஆராய்ந்து விடுதலை பெறவே நாம் முயன்று வருகின்றோம்.

### சமதர்மம்.

தோழர்களே! மனிதனுக்கு மனிதன் அன்புடன் வாழவேண்டுமென்ற எண்ணம் நமக்கிருக்குமேல் நாம் இன்றே கடவுள், மதம், ஜாதி, மோட்சம், தலைவிதி, நரகம், கர்மம், வேதம், புராணம், சாஸ்திரம் ஆகியவைகளை துணிவுடன் அகற்றிச் சமதர்மத்தைக் கைக்கொள்ள முற்படவேண்டும். மேற்கூறியவைகளை நீக்காமல் சீர்திருத்தம் செய்தல் என்பது இயலாத காரியம்.

### தனிவுடைமையும், பொதுவுடைமையும்.

தோழர்காள்! என் சொத்து, என் வீடு, என் நிலம், என் பேங்கு, என் தொழிற்சாலை, என் நாடு, என் தேசம், என் ஆட்சி என்ற தனிவுடைமைத் தத்துவம் நாட்டில் நீடித்துள்ளவரை முதலாளிகள், ஜமீன்கள், மகாராஜாக்கள், மடாதிபதிகள், சங்கராச்சாரிகள், பாதிரிகள், முல்லாக்கள், பேங்கு சொந்தக்காரர்கள், ஆலை தொழிற்சாலை சொந்தக்காரர்கள், ஆகிய பாடுபட்டு உழையாத சோம்பேறிகள் தான் தலைமுறை தலைமுறையாக இவ்வுலகில் சுகமாக இன்ப வாழ்வு பெறமுடியும். அதேபொழுதில் விவசாயிகளும், குடியானவர்களும், மில் தொழிலாளர்களும், உழைப்பாளிகளும், பாட்டாளிகளும், ஆடை நெசவு நெய்பவர்களும், வீடு கட்டுபவர்களும் தொழிலாளர்களும் காலமெல்லாம் கஷ்டப்பட்டும், வறுமையாலும், பிணியாலும், பசியாலும், அகால மரணத்தாலும் தினந்தோறும் கோடிக்கணக்கான மக்கள் மடிகின்றார்கள். இக்கொடுமைகள் அடியோடு ஒழியவேண்டுமானால் தனிவுடைமை யொழிந்து பொதுவுடைமை நிலவவேண்டும். உலகப்பொருள்கள் யாவும் மக்களின் பொதுவாக்கி, உலகமக்கள் யாவரும் ஒன்றுகூடி சக்திக்குத் தக்கபடி யாவரும் உழைத்து; தேவைக்குத் தக்கவாறு ஊதியம் பெறவேண்டும். அன்றுதான் உலகில் வேலையில்லாத் திண்டாட்டமொழியும், வறுமை நீங்கும். பசி பசி என்ற கூக்குரல் அடங்கும். ஆகையால், உலகத்தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள்; பொதுவுடைமை ஒன்றே உலகமக்கள் இன்புடன் உய்யும் வழியென்று உறுதியாக நம்புங்கள். தோழர்களே! குடியானவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் இவர்களிடையே சென்று இடைவிடாது பொதுவுடைமை பிரசாரம் செய்யவேண்டும். சமதர்ம சங்கங்கள் காணவேண்டும். மூடநம்பிக்கையை அகற்றவேண்டும். வீண் செலவுகளைக் குறைக்கவேண்டும் சுயமரியாதையோடு வாழ, வழி தேடவேண்டும்.

தோழர்களே! ஈரோடு, தோழர் டாக்டர் எம். கிருஷ்ணசாமி அவர்களை இம்மகாநாட்டுக்கு தலைமைவகித்து சிறப்புற நடத்தித்தருமாறு

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# நாஸ்திக நாட்டு ஒழுக்கம்.

[மதுரை எஸ். சையது அஹமது]

நாஸ்திகம்! ஆ! அதுபொல்லாத விஷம்! நாட்டில் பரவி விட்டாலோ ஒழுக்கத்தைக்கொன்று விடும். நாடு அல்லோல கல்லோலப் பட்டு விடும். வானம் இடிந்து விழுந்து விடும். மலைகளெல்லாம் தத்தம் இடங்களைவிட்டுப் பெயர்ந்து கூத்தாடத் தொடங்கி விடும். சமுத்திரம் பொங்கி நிலபாகத்தை விழுங்கி விடும் என்றெல்லாம், ஆஸ்திகர் கூக்குரலிடுவதுண்டு. ருஷிய சோவியத் ஆட்சியின் கொள்கை நாஸ்திகம், ஆஸ்திகம் அஸ்தமித்து நாஸ்திகம் உதயமாக அவ்வாட்சி பாடுபடுகிறது. நாஸ்திக சூரியனும், தனது கிரணங்களை பரப்பி நாடு முழுதும் பிரகாசிக்கத் தொடங்கி விட்டான். இத்தகைய நிலைமையில் ருஷியா தேசம் ஒழுக்கங்கெட்டு உலகம் சிறிக்கக் கிடக்கிறதா அல்லது ஆஸ்திகர், மூக்குமுனையில் விரல் வைத்து விழி பிதுங்க அதிசயப்படும்படி பிரகாசிக்கின்றதா? என்பதை கவனிப்பது உசிதமாகும்.

இங்கு ஒழுக்க மென்றால் என்ன? என்னும் பிரச்சினையைக் கிளப்பி தர்க்கித்துக் கொண்டிருக்கப்போவதில்லை. அது ஒரு தனிப்புத்தகமாக எழுதப்பட வேண்டிய விஷயம். மதங்களால் வகுக்கப் பட்டுள்ள ஒழுக்கம் உண்மையாக தற்காலத்திற்கேற்ற ஒழுக்கந்தானா வென்பது வேறு விஷயம். உலகம், தற்காலம் எதை ஒழுக்கம் என்று கருதிவருகிறதோ அதை ஆராய்ந்து எப்படி அது பகுத்தறிவுக்கும், நீதிக்கும் விரோதமாய் இருக்கிற தென்றும், உண்மையான ஒழுக்கம் எது வென்றும் எடுத்துக் கூறி வருகிறார்கள் அறிஞர்கள். அதை விடுத்து உலகம் ஏற்று நடந்து வரும் ஒழுக்க முறைகளை வைத்துக் கொண்டே இங்கே ஆராய்வோம்.

ஆஸ்திக நாடுகளில், விபசாரம் பரவிக கிடப்பதையும், இரவில் மட்டுமின்றி பட்டப் பகலிலும் முகத்தில் பவுடர்களைப் பூசிக்கொணடு போவோர் வருவோரை வயிற்றுப் பிழைப்புக்காக கையைப் பிடித்து இழுப்பதும், நாடகமோ, சினிமாவோ, நடனமோ முடிந்தவுடன், கொட்டகையைவிட்டு வெளிவரும் கூட்டத்தைக் கழுகுப் பார்வையோடு தமது வேட்டையை எதிர்பார்த்து வரிசையாக இரு புறமும் நிற்கும் விபசாரிகளையும், உலகம் நன்கறியும். இந்தியாவிலிருந்து மேல் நாடு சென்று வருவோர் இதை ஆச்சரியத்தோடு கூறுகின்றனர். இதைப்பற்றி திடுக்கிடத்தக்க புத்தகங்களும் அபரிமிதமாய் வெளிவந்திருக்கின்றன. கிறிஸ்து மதத்தைப் பரப்ப ஆயிரக்கணக்கான டாலர்களைக் கொடுத்து பாதிரிகளை நாலா புறமும் அனுப்பும் அமெரிக்காவைப்பற்றி அறிய வேண்டுமானால், 'அமெரிக்கன் நைட்ஸ்' [American Nights) 'கௌபா' எழுதிய 'அங்கிள் ஷாம்' 'Uncle Sham' உலகப் பிரசித்தி பெற்ற நீதிபதியான 'பென் லின்ட்ஸே' (Ben Lindsay) எழுதிய (Revolt of Modern Youth Companionate Marriage) முதலிய நூல்களை வாசித்துத் தெரிந்து கொளளலாம். மேல் நாடுமட்டும் இப்படி திடுக்கிடத் தக்க விபசாரத்தில் ஈடுபட்டிருப்பதாக நினைக்க வேண்டாம். சைனு வென்ன ஜப்பானென்ன? இந்தியா வென்ன? இன்னும் இதர கீழ்திசை நாடுகளென்ன இவைகளில் நடக்கும் விபசாரத்தைக் கண்டு நடுக்கங் கொள்ளாதிருக்க முடியாது.

இத்தகைய நாடுகளிடையே 'ஒழுக்கத்தைக் கொல்லும், நாஸ்திகம் பரவிவரும்ருஷியாவில்பிரமாண்டமான அந்த தேசத்தில் இத்தகைய காட்சிகளைக் காண முடியாது தற்போது அங்கே மொத்தம் 575விபசாரிகள் இருக்கிறார்கள். முதலாவது ஐந்து வருஷதிட்டத்துக்கு முன் 4000 விபசாரிகள் இருந்தார்கள் இப்போது கையாளப்பட்டு வரும் இரண்டாவது திட்டத்தின் கடைசியில் ஒருவர் கூட இல்லாதபடி செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. விபசாரிகள் மட்டுமின்றி கர்ப்பமாகும் மாணவிகளோ உறவினருக்கு இன்பமளிக்கும் பெணகளோ அங்கு இல்லை. விபசாரிகள் சீர்திருத்தப்பட்டு தொழிலில் ஈடுபடச் செய்யப்படுகிறார்கள். விபசாரம் செய்வது சட்ட விரோதமாக்கப்பட்டு வருகிறது. மீசையை முறுக்கிக் கொண்டு ஆஸ்திகம் பேசும் நாடுகள் இதற்கென்ன பதிலளிக்க முடியும்? விபசாரத்தைச் சட்ட சம்மத மாக்கி விட்டிருக்கும் ஆஸ்திக நாடுகளும், ஆஸ்திகர்களும் ரோஷம் என்பது கொஞ்சமேனும் இருந்தால் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேண்டுமா? இல்லையா? பதில் சொல்லுங்கள்.

ஆல் சற்று அயர்ந்தால் ஏமாற்றி விட்டு நழுவும் ஆஸ்திகர் நிறைந்த நாடுகள், அத்தகைய ஒருவரும் இல்லாத ருஷியாவைக் கண்டு என்ன சொல்ல முடியும்? ருஷிய தொழிலாளி யாயினும் சரியே, வேறு யாராயினும் சரியே, கூட்டம் எவ்வளவு அதிகமாயிருந்தாலும் டிராம் வண்டியிலிருந்து இறங்கியவுடன் வாடகை கொடாமல் நழுவி விடாது, காலதாமதமாயினும், நின்று பிறர் மூலமாவது கொடுத்த பின்பே தங்கள் தங்கள் வேலைக்குப் போகிறார்கள் என்று நேரில் பார்த்து வந்த வங்காளியொருவர் 'மாடன் ரிவியூ' பத்திரிகையில் எழுதி யிருக்கிறார். எத்தனை ஆஸ்திக நாடுகளில் இத்தகைய யோக்கியதை யுடைய தோழர்கள் இருப்பார்கள்.

இரவும் பகலும், கையில் 'பாட்டிலும், கிளாஸுமாக' காலங்கழிக்கும் ஜனங்கள்நிறைந்த நாடுகள் ஆஸ்திக நாடுகள்தான். அதில், மேல் நாடென்றோ கீழ் நாடென்றோ வித்தியாசமில்லை. அமெரிக்காவைப்பற்றியும், பிரான்சைப் பற்றியும் அபின் உருண்டைகளை விழுங்கும் சைனு, ஜப்பானைப்பற்றியும் தோழர்கள் நன்கறிவார்கள். ருஷியாவில் மருந்துக்குக்கூட, இத்தகைய பேர் வழிகளைக்காண முடியாது. சாராய வகைகள் விஷம் போல யாவராலும் கருதப்படுகின்றன. சாராய விற்பனையும் சட்ட சம்மத மானதல்ல. இத்தகைய நாஸ்திகம, ஆஸ்திகத்தைக்காட்டிலும் எவ்வகையில் தாழ்ந்தது? நெஞ்சில் கையை வைத்துச் சொல்லமுடியுமா?

கொலைகளில், தற்போது தென் அமெரிக்காவிலுள்ள 'சிலி' பிரதேசமும், 'மெக்ஸிகோவும் பேர் போனவை. புத்த மதத்தைக் கடைப்பிடித்துவரும் ஜப்பானும், பர்மாவும் அவைகளுக்குத் தாழ்ந்தவைகள் அல்ல. பர்மாவில், சமீபத்தில் இந்தியர்கள் ஈவு இரக்க மின்றி படுகொலைசெய்யப் பட்டதையும் அதே மாதிரி இதர தேசங்களில் அன்னியர் இருப்பிடந்தெரியாமல் கொலை செய்யப் பட்டு புதைக்கப்படுவதையும், பரிதாபகரமான நீக்ரோக்களை நாகரீகம் முதிர்ந்த அமெரிக்கர் காட்டு மிராண்டிகளைப்போல்--என்? அவர்களைக்காட்டிலும் கேடுகெட்டவர்களாய் நடுத் தெருவில் இந்த இருபதாவது நூற்றண்டில், தலைகீழாகத் தொங்க விட்டு கீழே தீமூட்டி பஸ்மீகரம் செய்வதையும உலகம் அறியாததல்ல. இத்தகைய அநாகரிகக் கொடுமைகள் ருஷியாவில் உண்டா? இல்லையே. ருஷியாவில் குற்றவாளிகள் குறைந்து கொண்டே வருவதும் சிறைச்சாலைகள் மூடப்பட்டு வருவதும் உலகம் அறிந்த தேயாகும்.

ஒருவன் மிருகங்களோடு போட்டி போட்டு எச்சில் இலைகளை எடுத்து வழித்து வயிறு நிறப்புவதையும், தொழிலாளர்,உணவின்றி தற்கொலை செய்து மடிவதையும், கந்தல்களை உடுத்திக் கொண்டு வீதிகளில் பிச்சைக் காரர்கள் திரிவதையும், கேவலமான குச்சுகளில், வெயிலிலும், பனியிலும் ஏழைகள் முடங்கிக் கிடப்பதையும் பார்த்துக்கொண்டு தங்கள் தொந்தி மட்டும் நிறைந்தால் போதும் என்னும் அமானுஷீக எண்ணத்துடன் அறுசுவை உண்டிகளை உட்கொண்டு, திண்டுமெத்தைகளில் புரளும் ஆஸ்திகர் ருஷியாவில் உண்டா? இத்தகைய ஆஸ்திகத்தைக் காட்டிலும் எல்லோரும் உண்டு சுகித்திருக்கக் கூடிய நாஸ்திகம் கெட்டதா? எந்த வகையில், ஆஸ்திகநாடுகளைக்காட்டிலும் தற்கால நாஸ்திக ருஷியா கெட்டுப் போய்விட்டது?

இத்தகைய விஷயங்களையும், இன்னும் நுட்பமான விஷயங்களையும் சொல்லிக் கொண்டே போகலாம். விரித்தால் பெருகும் என்று எண்ணி இத்துடன் முடிக்கின்றேன்.

நான் இதுவரை கூறிவந்த விஷயங்களிலிருந்து தெளிவாய் தோழர்களுக்கு ஒரு விஷயம் மட்டும் விளங்கியிருக்கும். அதாவது,பொது மக்களுடைய ஒழுக்கத்தைக் கேடாமல் பாதுகாக்க வேண்டுமானல் அது கடவுளால் முடியாது. சமதர்ம பொருளாதாரத் திட்டத்தைக்கொண்ட அரசாங்கத்தால் தான் முடியும் என்பதே யாகும்.

பொருளாதாரத்திட்டத்தால்தான் ஒழுக்கத்தை பாதுகாக்க முடியுமேயொழிய வெறும்நம்பிக்கைகளாலும், கட்டுக் கதைகளாலும் முடியாது. நம்பிக்கை மக்கள் ஒழுக்கத்தைப்பாதுகாத்தது மில்லை. இனி பாதுகாக்கப்போவது மில்லை என்பதை இன்னும் உணரவில்லையென்றால் அது சுத்த பைத்தியக்காரத்தனமே யாகும். இதுவரை உலகத்தில் கணக்கிலடங்காத தீர்க்கத்தரிசிகளும், 'ஆண்டவன் குமாரர்களும்', அவதாரங்களும், ஆள்வார்களும்,சமயாச்சாரிகளும், வேதாந்திகளும், மத குருக்களும் தோன்றி, தொண்டை வறள வறளக்கதறியும், புத்தகம் புத்தகமாய் எழுதியும் மக்களை நல்லவர்களாய் வைக்க முடிய வில்லை என்பதையும், அப் பெரியார்களுடைய நோக்கம் தோல்வியடைந்து விட்டதையும் சிந்திப்போருக்கு இவ்விஷயம் தெளிவாய் புலப்படும். இம்மியாவது அவர்களுடைய உபதேசங்களுக்குப்பின் இத்தனை ஆண்டுகளாயினும் உலகம் சீர்திருந்தி யிருக்கிறதா? தோழர்களே சிந்தியுங்கள். இனியாவது உண்மையை ஒப்புக் கொள்ளுங்கள்.

---

## சென்னை மாகாணத் தமிழர் மகாநாடு திருநெல்வேலி.

1. பிறப்பாலேனும், வளர்ப்பாலேனும், தொழிலாலேனும், கொள்கையாலேனும், மக்களுக்குள் உயர்வு, தாழ்வு, வேற்றுமை, பிறப்பிக்கும் மனப்பான்மையை இம்மகாநாடு வன்மையாய்க் கண்டிக்கிறது. மேற்கண்ட வேற்றுமைகள் ஒழிவதற்கு, உடனிருந்துண்ணலும், கலப்பு மணமும், அவசியமென இம்மகாநாடு கருதுவதால், அவைகளைக் கையாளும்படி மக்களை இம்மகாநாடு ஊக்குவிக்கிறது.

2. பயிர் நிலம் முதலிய ஆக்கக் கருவிகள், அத்தொழில் செய்யாத முதலாளிகளின் உடைமையாகவில்லாமல், அத்தொழிலாளர்களின் உடைமையாக இருப்பதே நாட்டிற்கு நலன் தருமென இம்மகாநாடு கருதுகிறது. இந்நன்னோக்கம் நிறைவேறும் பொருட்டு மக்களும், அரைத்தனத்தாரும் முயலவேண்டுமென இம்மகாநாடு அவர்களை வேண்டிக்கொள்கிறது.

3. பொதுக்கூட்டங்களில்சமயத்தைப்பற்றிப் பேசுவதும், சமயக்கொள்கைகளை வெளியிடுவதும், சமயக் குறிகளைக் கையாளுவதும், மக்களுக்குள் அன்பும், ஒற்றுமையும் வளர்வதற்குத் தடையாயிருப்பதால் அவைகளைப் பொதுக் கூட்டங்களில் விலக்க வேண்டுமென இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

4. தற்கால முற்போக்கிற்கேற்ப தமிழ் எழுத்துக்களின் வடிவங்களையும், தொகுதிகளையும் மாற்றவேண்டுமா என்றும், மாற்ற வேண்டுமானல் எவ்வாறு மாற்ற வேண்டும் எனவும் ஆராய்ந்து தெரிவிக்க, ஒரு உட்சங்கம் நியமிக்க இம்மகாநாடு தீர்மானிக்கிறது. [உறுப்பினர் பெயர் பின்னல் தெரிவிக்கப்படும்]

மகாநாட்டின் 2வது அறிக்கைப்படி மேற்கண்ட நான்கு தீர்மானங்கள் இன்று [13-3-34] என்னல் மகாநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அத்தீர்மானங்களையும் அக்கருத்துக்கும் பொருந்திய பிற தீர்மானங்களையும் நிறைவேற்றுவதில் ஆர்வமுள்ள தோழர்களனைவரும் அக்கருத்துள்ள பிற தோழர்களுடன் மகாநாட்டுக்கு வருமாறு வேண்டுகிறேன்.

செ. தெ. நாயகம்.

---

## வியர்வைக் கடல்

[பாரதிதாஸன்]

### அதிகாலை.

கிழக்கு வெளுக்குமுன் வெளியிற் கிளம்பினேன்
ஒளிசெயும் மணியிருள், குளிர்ச்சி, நிசப்தம்,
இவற்றிடை என்னுள்ளம் துள்ளும் மான்குட்டி!
உத்ஸாகம் என்னைத் தூக்கி ஓடினது!

### இயற்கை.

குன்றம் இருக்கும் அக் குன்றத்தின் பாங்கில்
குளமும், அழகிய குளிர் பூஞ் சோலையும்
அழகு செய்யும்! அவ்விடத் தில் தான்
என்றன் சொந்த நன்செய் உள்ளது.

### பகல்.

கடல்மிசை உதித்த பரிதியின் நெடுங்கதிர்
வானெலாம் பாய்ந்தது! பறந்தது வல்லிருள்!
புவியின சித்திரம் ஒளியிற் பொலிந்தது.
இயற்கை தந்த எழிலிடை நடந்தேன்.

### வயல்.

வளம்பெற நிறைந்த இளப்பயிர்ப் பசுமை
மரகதம் குவிந்த வண்ணம் ஆயிற்று
மரகதக் குவியல்மேல் வாய்ந்த பனித்திரள்
காணக்கண் கூசும் வயிரக் களஞ்சியம்!
பரந்த என் வயலைப் பார்த்துக்கொண் டிருந்தேன்
மகிழ்ச்சி தவிர மற்றொன்றும் காணேன்!

### உழைப்பு.

களையினைக் களைவது கருதி, எனது
பண்ணை ஆட்கள் பலபேர் வந்தனர்.
என்னை வணங்கினர். வயலில் இறங்கினர்.
வில்லாய் வளைந்தது மேனி; அவர்கள் தோள்
விசையாய்க் களைந்தது களையின் விளைவை!
முகவிழி கவிழ்ந்து வயலில் மொய்த்தது.

### நடுப்பகல்.

காலைப் போதினைக் கனலாற் பொசுக்கிச்
சூரியன் ஏறி உச்சியிற் சூழ்ந்தான்.
சுடுவெயில் உழவர் தோலை உரித்தது
புதுமலர்ச் சோலையில் நான் ஓடிப் போனேன்.

### வெயில்.

குளிர்புனல் தெளிந்து நிறைந்த மணிக்குளம்!
நிழல்சேர் கரையில் நின்றுகொண் டிருந்தேன்.
புழுக்கமும் வியர்வையும் எழுப்பி என்னை
நலிவு செய்த நச்சு வெய்யில்
வானி விருந்து மண்ணிற் குதித்துத்
தேன்மலர்ச் சோலைச் செழுமை சுட்டது
உளத்தையும் உயிரையும் பிளப்பது விந்தை!
குளத்தில் விழுந்து குளிக்கத் தொடங்கினேன்.
வெள்ளப் புனலும் கொள்ளிபோல் சுட்டது.

### உழைப்புத் துன்பம்.

காலைப் போதினைக் கனலாற் பொசுக்கிச்,
சோலையும் கடந்து சுடவந்த வெய்யில்
விரிபுனற் குளத்தையும் வெதுப்பிய தெண்ணினேன்
எண்ணும் போதென் கண்ணின் எதிரில்
வியர்வையும் அயர்வுமாய்ப் பண்ணை யாட்கள்
வந்து நின்று வணக்கம் செய்தனர்.
ஐயகோ நெஞ்சமே இந்த ஆட்கள்
தாங்கொணுக் கனலை எவ்வாறு தாங்கினர்?

### வியர்வைச்கடலின் காட்சி!

களைபோக்கும் சிறுபயன் விளைக்க இவர்கள்
உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்,
ஒவ்வொரு பளிங்குத் துளியிலும் கண்டேன்:-
உலகப் பெரும்பயன் விளைக்கப்
பலகோடி மக்களின் வியர்வைநீர்க் கடலையே.

---

## சென்னை மாகாணத் தமிழர் மகாநாடு.

(சென்னை எஸ். ரங்கநாதன்)

பகுத்தறிவு இயக்கம் தோன்றி மதத்தையும், சமயத்தையும் ஒழிக்க வேண்டும் என்று வீரமுழக்கம் செய்யும் இக்காலத்தில் சிற்சில இடங்களில் சமயவாதிகளும், மதப்பித்தர்களும் "மொழியை காப்பாற்றல்" என்ற போர்வையை போற்றிக்கொண்டு சமயத்தையும், மதத்தையும் காப்பாற்ற முற்படுகிறார்கள்.

மார்சுமாதம் திருநெல்வேலியில் சென்னை மாகாண தமிழர் மகாநாடு ஒன்று நடைபெற போவதாக நமக்கு தெரியவந்தது. ஷை மகாநாட்டிற்க்கும் கடந்த டிசம்பர் மாதம் சென்னையில் நடைபெற்ற "தமிழ் அன்பர் மகாநாட்டிற்கும்" என்ன வித்தியாசமோ? அந்த வித்தியாசம் தான் ஷை மகாநாட்டிற்கும், என்பது நமது அபிப்பிராயமாகும். விளக்கி கூற வேண்டுமானல் தமிழ் அன்பர் மகாநாடு பூணூல்போட்ட பிராமணர்களால் கூட்டப்பட்டது. இம் மகாநாடு பூணூல் போடப்படாதவர்களால் கூடப்போகிறது. ஆனல் பூணூல் போட்ட பேர்வழிகளால் கூட்டப்பட்டதைவிட இது மகா மோசமானதும், பொதுமக்கள் முன்னேற்றத்தை தடைசெய்யக்கூடியதாகவேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே நமது சுயமரியாதை தோழர்கள் எப்படி "தமிழ் அன்பர் மகாநாட்டில்" பங்கெடுத்துக் கொண்டு இனிது அவர்கள் குட்டை வெளிப்படுத்தி "மொழியின்" பேராலோ அல்லது "தமிழர் வாழ்கையின்" பேராலோ சமயத்தையோ, மதத்தையோ, காப்பாற்ற முடியாது என்று புத்தி புகட்டினர்களோ அவ்விதம் திருநெல்வேலியில் நடைபெற போகும் சென்னை மாகாண தமிழர் மகாநாட்டாருக்கும் புத்தி புகட்டுமாறு, சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் சார்பாகக்கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

### அரை கோடியா?

நமது நாட்டு பூகம்ப நிதிக்கு 10 கோடி, வேண்டும். 5 கோடி இருந்தால் ஒரு மாதிரியாக நிலைமையை சீர்திருத்தலாம் என்று கஷ்ட நிவாரணகாரர்கள் கூறுகிறாகள். ஆனல் இன்னும் வைசிராய் நிதிக்கும் ராஜேந்திர பிரசாத் நிதிக்கும் 50 லெஷம் கூட சேர்ந்தபாடில்லை. நாட்டில் செல்வமில்லையா? அல்லது கடமையை செல்வம் படைத்தோர் உணற முடியவில்லையா? யார் இதை சொல்வது?

---

### கோயமுத்தூர்

தோழர் சி. என். நாராயணன் அவர்கள் தமிழ்நாடு புக்ஸ்டாலில் குடியரசு வெளியீடு புஸ்தகங்களும், பகுத்தறிவு நூற்பதிப்பு புஸ்தகங்களும் கிடைக்கும்,

## கிருஷ்ணகிரியில்

# சுயமரியாதைப் பிரசாரம்.

### தோழர்கள்

## நீலாவதி, ஜீவானந்தம் வீரமுழக்கம்.

கிருஷ்ணகிரி தாலூக்கா டௌலதாபாத் போர்டு எலிமெண்டரி ஹிந்து பெண்பாடசாலை ஆண்டுவிழா 11-3-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு மேற்படி கட்டிடத்தில் திருச்சி தோழர் எஸ். நீலாவதி அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பாடசாலைக் கட்டிடம் செடி கொடிகளாலும் காகிதங்களாலும், வளைவுகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஏராளமான பெண்மக்களும், ஆடவர்களும், பல உத்தியோகஸ்தர்களும் சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேல் கூடியிருந்தனர். பாடசாலை மாணவிகளால் பாட்டுகள் பாடப்பெற்றதும் கிருஷ்ணகிரிதாலூகா போர்டு பிரசிடெண்டு தோழர் டி. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு ஷை மாணவிகளால் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்தளிக்கப்பெற்று மாலை சூட்டப்பெற்றதும் அன்னார் அதற்கு பதில் கூறியதாவது:—

தோழர்களே!

வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கும் வழக்கம் பிரயோஜனமற்றது என்று கருதுகிறேன். இதுவரை தாலூகா போர்டு நிர்வாகத்திலிருந்த இப்பள்ளிக்கூடம் மிக மகிழ்ச்சியோடு நடைபெற்றது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இனிதாலூகாபோர்டுகள் எடுக்கப்பட்ட பிறகு ஜில்லா போர்டு நிர்வாகத்திலும் மேன்மைக்கு பங்கம் ஏற்படப் போவதில்லை என்றும் தெரிவிக்கிறேன். இந்த ஊரைப்பொருத்த வரையில் 14400 பெண்கள் படிக்க வேண்டியிருக்க சுமார் 1000 பெண்களே படிக்கிறார்கள் என்றால் பெண் கல்வி விஷயத்தில் பெற்றோர்கள் எவ்வளவு கவனக்குறைவாக இருக்கிறார்கள என்பது விளங்கலாம். 15வயது வரையாவது கட்டாயம் படிக்க வைக்கவேண்டும். இம்மாதிரி பொது ஸ்தாபனங்களில் ஆசிரியர்களோ, பெற்றோர்களோ ஜாதி மத பேதங்களை ஒழிக்கவேண்டும். அப்பொழுதுதான் ஸ்தாபனங்கள் மேன்மையடையும் என்று கூறினார்.

பிறகு மாணவிகளால் திருப்பத்தூர் பெஞ்சு மாஜிஸ்திரேட்டும்,மாதர் முன்னேற்ற உழைப்பாளருமான தோழர் வில்லியம் ஜோசப் அம்மையாருக்கு வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தளித்து மாலையிட்டனர். அதற்கு அன்னார் பதில் கூறியதாவது:—

சகோதர சகோதரிகளே!

இவ்வளவு சிரமத்தோடு பெண் கல்விக்காக இரவு பகலாய் அருமபிரயாசையுடன் உழைத்த ஆசிரியைகளுக்கும், நண்பர்களுக்கும் எனது நன்றிஉரியதாகுக. பெண்சமூகத்திற்குகல்வி எப்படி அவசியமோ, அதேபோன்று தேகாப்பியாசம,கைத்தொழில் முதலியவை அவசியமாகும். கூச்சம், நாணம் என்பவைகளால் தடுத்து வைக்கப்பெற்ற பெண்சமூக முன்னேற்றம் இன்று உற்சாகத்துடன் வெளி வந்திருப்பது கல்வி அறிவு பெற்றதே காரணம் ஆகும். மேல்நாட்டில் அனேகப்பெண்கள் உயர்ந்த வேலைகளில் அமர்ந்து கெட்டிக்காரத்தனமாக வாழ்ந்து வருகிறார்கள். நமது நாட்டில் பாட்டிமார்கள் கூறுவது போல் "அடுப்பூதும்பெண்களுக்குப்படிப்பெதற்கு" என்றும் இன்னும் இது மாதிரியான பழமொழிகளைக் கொண்டு முன்னுக்கு வரவிடாமல் அடக்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே இனியாகிலும் பெண் சமூகத்தின் கஷ்டத்தை எண்ணிப் பார்த்து தங்கள் தங்கள் குழந்தைகளைத்தவறாது பள்ளிக்கு அனுப்பி மேம்பாடடையச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன் என்று கூறியதும் மாணவிகளால் திருச்சி தோழர் எஸ். நீலாவதி அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசிததுக்கொடுத்து மாலை சூட்டினர். பிறகு அன்னார் அதற்கு பதில் கூறிதமது தலைமைப் பிரசங்கத்தை முன்னுரையாகப் பேசியதின் சாரம் பின்வருமாறு:—

தோழர்களே!

இங்கு கூடியிருக்கும் மாபெரும் கூட்டத்தைக்கண்டு மகிழ்ச்சி யுறுகிறேன. இதே தினத்தில் இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா சுயமரியாதை மகாநாட்டிலும், சென்னையில் நடைபெறும் சுயமரியாதை நிர்வாகக்கமிட்டி கூட்டத்திலும் கலந்துகொள்ள வேண்டிய வேலைகளிருந்த போதிலும், இன்று இங்கு நடைபெறும் நிகழ்ச்சிக்கு அவசியமாக வந்து சேரவேண்டிய நிர்பந்தம் எனக்கு ஏற்பட்டதற்குக் காரணம் இங்குள்ள சிறுமிகள் முன்னேற்றத்தின் பால் ஆவல்கொண்டதேயாகும் இதற்கு உற்றதுணையாக தோழர்களான டி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், உபாத்தியாயினிகளும் ஏற்பட்டிருப்பதற்கு நான் அளவிலா மகிழ்ச்சியடைகிறேன். சமீபத்தில் ரத்தாகப்போகும் தாலூகா போர்டு நிர்வாகத்தினால் ஒரு அளவு உதவி குறையுமென்று இப்பாடசாலை மாணவிகள் எண்ணியிருப்பதாக நினைக்கிறேன். அந்தக்குறையை நிவர்த்திக்கப்படுமென்று தோழர்கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சற்று முன்பு கூறினார்கள். இருந்தாலும் ஜில்லாபோர்டு அங்கத்தினர்களும்,தலைவரும் இம்மாதிரி ஸ்தாபனங்களுக்கு உதவி செய்வார்களென்றும் அப்படிச் செய்யாவிடில் உலகில் பெரும் குறைபாடுடையவர்களாக கருதப்படுவார்களென்றும் தெரிவித்துக்கொளுகிறேன்.

ஸ்தாபனங்களுக்கு உதவி செய்வோர் ஒரு புறமிருக்க பெற்றோர்களுடைய கவனக்குறைவுதான் நமது நாட்டில் அதிகமாக இருக்கிறது. ஒரு பெண்ணையாவது நன்றாகப் படிக்கவைத்தார்கள் என்று சொல்வதற்கில்லை 3-வது 4-வது படித்துவிட்டால் இது ஒரு படிப்பு என்று கருதிவிடுகிறார்கள்.10 அல்லது 12 வயது ஆனதும் படிக்காதவாறு வீட்டில் நிறுத்திக் கொண்டுவிடுகிறார்கள் இது மிகக்கண்டிக்கத்தக்கதாகும் பல தாய்மார்கள் வீட்டில் வேலைக்காரப் பெண்களாகவும், பிள்ளை தூக்கும், ஆயாக்காரியாகவும் ஆக்கிவிடுகிறார்கள். பெண் சமூகம் தாலூகா போர்டு தலைவரையோ, ஜில்லா போர்டு தலைவரையோ நம்பி கல்விவளர்க்க முடியுமென்பதில் எனக்கு நம்பிக்கையில்லை.நமது பேரில் அவர்களுக்கு அனுதாபமிருந்தால் ஒரு அளவுதான் கிடைக்கும். எத்தனை ஜில்லா போர்டு தலைவர்கள் பெண் சமூகத்திற்கு உதவி புரிந்தார்கள் என்பது நாம் இதுவரை அறியாமலிருந்ததில்லை. ஆதலால் இனியும் காலந்தாழ்த்தாது எங்கள் சமூகம் விடுதலையடைய நாங்களே பொறுப்பாளி என்று உணர்ச்சியுடன் வெளிவரவேண்டும்.

பெண்களைப்படிக்க வையுங்கள் என்று சொன்னால் எங்களிடம் பணமில்லையே என்று கூறுகிறார்கள் சில மக்கள்.இதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்விதம் எங்களிடம் கூறி ஏமாற்றிவிடுவதாக எண்ணிக் கொண்டிருக்கும் தோழர்களே உங்கள் வாழ்க்கையில் நடைபெறும் மூடப்பழக்கவழக்க சடங்குகளில் எதை நிறுத்தினீர்கள்! குறைத்தீர்கள்! யோசியுங்கள்! ஏன் வீணே உங்களையே நீங்கள் ஏமாற்றிக்கொள்ளுகிறீர்கள்! பெண்பிறவி இழிந்தபிறவி என்று கூறும் மனப்பான்மையுடையோரை நாட்டைவிட்டுத் துரத்துங்கள்! அவர்கள்தான் நமக்குப்பூரண விரோதி.நாம் சிறிது கற்றுக்கொண்ட மாத்திரத்திலே இதுவரை ஏமாற்றியவைகளை உணரவில்லையா? ஆகவே இன்னும் கற்போம்! தகிடுதத்தம்செய்பவர்களை விரட்டுவோம்! என்பதுதான் எனதுகோரிக்கை. அவசரப்பட்டு சிறு பெண்களுக்கு மணம் செய்துவிட வேண்டாம் மணம் வேண்டும்போது செய்துகொள்ளலாம் ஏனையவற்றை எனது முடிவுரையில் கூறுகிறேன் என்று கூறியதும் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் "பெண்கள்முன்னேற்றம்"என்பதுபற்றி 15 நிமிஷம்பேசினார். பின்புசீர்திருத்த நாடகம் மாணவிகளால் நடைபெற்றது (அதன்சாரம்:- ஒரு ஜமீன்தார் ஏழைகளுக்கு பல வழிகளிலும்உதவி செய்து தொழிலாளிகளை ஆதரித்து முடிவில் ஒரு ஆதிதிராவிடப் பெண்ணை சுயமரியாதைக் காதல் கலப்பு மணம் புரிந்துகொள்ளுகிறார் )

### தலைவர் முடிவுரை.

தோழர்களே!

இதுவரை நாடகத்தைக் கவனமாகக் கவனித்து வந்தீர்கள். மேலும் இந்நாடகத்தின் முக்கிய விஷயமான காதல் கலப்புமணத்தைக் கண்டுகளித்தீர்கள். இதையேதான் நாங்கள் நடைமுறையில் வர வேண்டுமென்கிறோம். நீங்கள் மறுக்கிறீர்கள்.இதன் அர்த்தம்விளங்காததாகும். இதைக் குறித்து சுப்பிரமணிய பாரதி 'நாடகத்தில் காவியத்தில் காதலென்றால் நலமென்பார் வீட்டினுள்ளே, கிணற்றோரத்தே காதலென்றால் உறுமுகின்றார்" என்று எடுத்துக்காட்டுகிறார். இன்று நாடகங்களில் ஆண் வேடம் போட்டும்,மற்றவிதத்திலும் நடித்து உற்சாகத்துடனிருந்த சிறுமிகளைப் பார்த்தோம். இது எத்தனை நிமிஷம் என்று கருதுகிறீர்கள். இதே பெண்களுக்கு ஒரு உரிமையும் இல்லாதவாறு அடிமையடுத்தப் படுவதற்கு அதிகநாள் வேண்டியதில்லை. ஆகவே பழைய பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்படாமல் தீவிரமாக முன்வந்து வேண்டியவற்றைச்செய்து உலகிலுள்ள பொருள்களுக்கு நாமும் சொந்தக்காரர் என்பதை நிரூபிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பின்பு வந்தனம் கூறி கூட்டம் இரவு 9-மணிக்கு கலைந்தது.

### கிருஷ்ணகிரி போதுக்கூட்டம்.

12-3-34 திங்கட்கிழமை மாலை 5-மணிக்கு கிருஷ்ணகிரி முனிஸ்வர தியேட்டரில் சுமார் 2000 ஆண் பெண்களைக்கொண்ட பொதுக்கூட்டம் தோழர் எஸ். நீலாவதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்களான ராமசுப்பிரமணியம், ப. ஜீவானந்தம் சுயமரியாதை இயக்கம்பற்றிப் பேசினார்கள். இரவு 9-மணிக்கு கூட்டம்முடிந்தது. மறுநாள் காலை 6-மணிக்கு தோழர்களான நீலாவதி, ராமசுப்பிரமணியம், அ. இராகவன்சேலத்திற்கும், ஜீவானந்தம் எஸ். வி. லிங்கம் ஜோலார்பேட்டைக்கும் பிரயாணமானார்கள்.

---

சைவர்களே
தமிழ் வளர்ச்சிக்கு
முட்டுக்கட்டை
போடுபவர்கள்

# கூட்டுழைப்பாளர் ஆட்சி.

(மு. சி. பூ.)

வாரந்தோறும் வரும் "குடி அரசு", "புரட்சி"யில் பொதுவுடைமை, சமவுரிமை என்பனபற்றி வருங் கட்டுரைகளைப் படித்து வருவதில் தோன்றிய சில ஐயங்களை இவண் கூறி நண்பர்களுடைய தெளிவுரையைக்காண அவாவுகின்றேன்.

1. ருஷியாவில் போல்ஷ்விக் பகுதியிலிருந்த பிரபுக்கள் வெளியேறிச் சென்றனரா? உழைப்பாளிகளாக மாறினரா?

2. பொதுவுடைமையும் சமவுரிமைநலமும் வறுமையைப்போக்கடிக்குமென்பதில் தடையில்லை. ஆனால் அறிவும் உடலாண்மையும் அனைவருக்கும் ஒரு திறத்ததன்றே. அறிவாளிகளும் உடலுரம் பெற்றவர்களும் தத்தமக்குத் தகுந்த வேலை செய்வர். அவர்களுக்கு ஊதியத்தில் ஏற்றம் தாழ்ச்சியுண்டா? அறிவாளிகள் அட்டணைக்கால் போட்டுக்கொண்டு ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறுவதையும் உடலுரம் பெற்றவர்கள் படி நெல்லுக்கு உழைப்பதையும் பார்க்கும் நம்முலகில் உயர்வு தாழ்வு ஏற்பட்டிருக்கிறபடி கூட்டுழைப்பாளர் ஆட்சியில் ஏற்படுதலியலாதே அங்ஙனமாயின் அறிவாளர் அறிவு வளர்ச்சிக்கு ஊக்கமுண்டா?

3. அன்றியும், சிலர் பாக்கிய வசத்தால் மக்கட்பெருக்கமுடையர், சிலர் அபபாக்கியமில்லாமல் மக்கட்குறுக்க முற்றுளர். பின்னவர் முன்னவரைப் போன்று உழைப்பரோ?

4. பொதுவுடைமை சமவுரிமையில் உணவு ஆடையிலும் நவீன கண்ணுக்கினிய செவிக்கினிய இசை நாகரிகச்சுகளிலும் வேற்றுமையுண்டா?

5. தோழர் சி. டி. நாயகம் அவர்கள் வரைந்துள்ளபாட்டாளி வறுமைப் பிணியை நீக்கு முறையைப் படித்தேன். நிலம் சொந்தமாயிருந்தால் நிலத்தைப்பண்படுத்திப் பயிரிட்டுப்பாதுகாத்து வருவாயடைவது போல கட்டுக்குத்தகைக்காரன் பாடுபடானென்பது திண்ணம். ஏனெனில் அவன் கால எல்லைக்குட்பட்டு பயிரிடுகிறவன். கிடைத்தது போதுமென்று நினைப்பவன். நிலத்தைக் கழுவிக் குடித்து விடுபவன். இது உண்மைதான். பாடுபடக் கூடமுடியாத நிலக்கிழவர் நிலத்தை விற்றுப் பணத்தைப்பாங்கியில் வட்டிக்குப் போட்டு வட்டியை வாங்கி சுக சீவிகளாயிருப்பது நலமே. நிலக்கிரயத்தொகை இல்லாதவர்கள் பாங்கிகளில் வட்டிக்குப் பணம் வாங்கி நிலம் பெறுதலால் அவர்கள் நிலைமை எங்ஙனமாகும்? விளைவுக் குறைவால் பருவ தாழ்ச்சியால் வட்டி கொடுக்கவும் கடனை அடைக்கவும் இடமில்லாமல் எத்தனை நிலமுடையவர்கள் தற்காலம் வறுமையிலாழ்ந்துளர்? அன்னார் நிலைமைதானே புதிய நிலக்கிழவருக்கும் ஏற்படும்? அன்னார் நிலவரும்படி காணுமல் வேறுவழியில் வறுமையை நீக்க முயல்வரன்றோ? நிலவரும்படி வட்டிக்குக் கடன் வாங்காமல் ஆட்சியாளர் முதலில் கிரயத்தொகையையும் பயிரிடுஞ் செலவையும் இனமாகக் கொடுத்து தவணையில் நிலவுழைப்பாளிகள் முழுமனதுடன் பூமியில் பாடுபட்டு வறுமை நீங்கிச்செழிப்புறுவார்கள். அதற்குக் கோடிக்கணக்கான தொகை வேண்டும். பணத்தால் நிகழும் அன்னியராட்சியில் அது எவ்வாறு இயலும். கூட்டுழைப்பாளராட்சியே நாடெங்கும் நிலைப்புறின் பொதுவுடைமையும் சமவுரிமையும் ஏற்படும். நாடு, மக்கள் உழைப்பால் செழிக்கும்.

6. பிறந்தது முதல் ஆட்சியாளர் செலவில் 25 ஆண்டுகள் பயிற்சிக்கும், பின் 25 ஆண்டுகள் உழைப்பிற்கும், பின்னுள்ள ஆயுட்காலம் ஓய்விற்கு புரியனவென்றங் கூறப்பட்டிருப்பதாக அறிகிறேன். கருவுற்ற பெண்டிருக்கும் வசதிகள் ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிகிறேன். நன்மை மே. 1-4 வினாக்களுக்கு விடைவந்தால் இது தெளிவுறும். 5-வது பத்தியில் யான் கூறியிருப்பதை ஆராய்ச்சி செய்யவேண்டுகிறேன். தற்காலத்தில் பாடுபடும் பள்ளர்கள் நிலைமையை நினைக்கின் யான் 5-வது பத்தியில் கூறியாங்கு ஐக்கிய நாணய சங்கமாயினும் ஆட்சியாளர் கருவூலத்தினின்றாயினும் அன்னாருக்கு இதுவரை ஏற்பட்டுள்ள கடன் ஒழிக்கப்படுமாயின் அன்னார் நிலைமை நலனுறும். பணய நாணயமென்பதே கூடாது. பண்டமாற்று ஏற்படுமாயின் பணவாசை நீங்கும். மக்கள்மீது அன்புமிகும். உலகம் உய்யும்.

7. பண்ணையார்களும், பட்டதாரிகளும், பாளையத்தாரும், மடாதிபதிகளும் உழைக்க நேரிடின் எதற்கு உதவுவார்கள்? பாடுபடுவரேல் ஒழுக்கமும் தேகாரோக்கியமும் பெற்று மாண்புடை மக்களாவார்கள். இது உறுதி.

# மாகாண சுயமரியாதைச் சங்கம்.

## மத்தியசபைக் கூட்டம்.

### மாகாண மகாநாடு நடத்த முடிவு.

### அங்கத்தினர்கள் அனைவரும் பதிவு செய்துகொள்ளுங்கள்.

இம் மாதம் 11-ந் தேதி சென்னை "நாஷனல் லிஸ்ட்" ஆபிசில் சுயமரியாதைச் சங்கத்தின் மத்தியசபைக் கூட்டம் நடைபெற்றது. அடியில்கண்ட அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். தோழர்கள் டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியன், என். சிவராஜ், கே. வி. அளகிரிசாமி, சி. நடராஜன், கே. ஏ. பி. விஸ்வநாதன். எஸ். ராமநாதன். அதுசமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

சுயமரியாதை இயக்கத்தின் தாயாக விளங்கிய தோழர் E. V. R. நாகம்மாளும், இந்தச் சபையின் அங்கத்தினர்களாகிய தோழர்கள் எஸ். ராமச்சந்திரன், ஏ. ஏ. பி. கோபாலகிருஷ்ணன் இவர்களும் மரணமடைந்ததற்கு இந்த சபை வருந்துகிறது.

நான்காவது சுயமரியாதை மாகாண மகாநாட்டைத் திருச்சியில் நாளது ஆகஸ்டு மாதத்தில் நடத்துவதென்று தீர்மானிக்கிறது.

அதுவரையில் சுயமரியாதை இயக்க சம்பந்தமாக வேறுதாலுகா, ஜில்லாமகாநாடுகள் நடத்துவதை நிறுத்திவைத்து ஜூன் மாதம் 30-ந் தேதிக்குள் ஒவ்வொரு ஜில்லாவிலும் சுயமரியாதைச் சங்கத்திற்கு குறைந்தது ஆயிரம் அங்கத்தினர்களையாவது சேர்க்கவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் சங்கங்கள் தங்கள அங்கத்தினர் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கு முயற்சிப்பதோடு சங்கங்களில்லாத ஸ்தலங்களில் புதிதாகச் சங்கங்கள் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

அங்கத்தினர்கள் தங்கள் வருஷ சந்தா 4 அணாவையும் ஜூன் மாதம் 30-தேதிக்குள் சென்னை பிராட்வேயில் இருக்கும் திருவாங்கூர் நாஷனல் பாங்கிக்கு அனுப்பி ரசீதைக் காரியதரிசிக்கு (பர்க்கஸ் லேன் சென்னை) அனுப்பிவைக்கவேண்டும் அப்படிச் செய்யத்தவறுகிறவர்கள் நான்காவது சுயமரியாதை மாகாண மகாநாட்டிற்கு பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படவோ, பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவோ உரிமையுடையவர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

ஜூலை 1-ந் தேதி இந்தச் சபையின் அடுத்த கூட்டம் நடத்தி நான்காவது சுயமரியாதை மாகாண மகாநாட்டைப்பற்றி முடிவான ஏற்பாடுகள் செய்வதெனத் தீர்மானிக்கிறது.

நான்காவது சுயமரியாதை மாகாணமகாநாடு கூடுகிறவரையில் அங்கத்தினர்கள் சந்தாத் தொகையை செலவு செய்யாமல் பாங்கியிலேயே வைத்திருப்பதென்று தீர்மானிக்கிறது.

சென்னை பிராட்வேயில் இருக்கும் திருவாங்கூர் நேஷனல் பாங்கியை, இந்தச் சபைக்குப் பாங்காக நியமிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்று மகாநாடுகளின் வரவு செலவுக் கணக்குகளை இந்தச் சபைக்கு அடுத்த கூட்டத்திற்கு முன் அனுப்பி வைக்கும்படி வரவேற்பு சபைகளைக் கேட்டுக்கொள்ளுகிறது.

# உலக சிருஷ்டியும் கட்டுக்கதையும்.

[ரீசன் ஆசிரியர், டாக்டர் C. L. D'Avoine M. D. எழுதியது]

இப் பரந்த உலகத்தில் நிலவும் ஜீவராசிகளைப்பற்றிய வரலாறு இரண்டாகும். எல்லா ஜீவராசிகளும் சிறிய நிர்மாணத்திலிருந்து மிகப் பல வேறுபாட்டால் மாறுபடுகின்றன என்பனவற்றை விளக்கும் விஞ்ஞானக் கோட்பாடு ஒன்றும்; எல்லாம் ஓர் அற்புத தெய்வீக சக்தியால் திடீரென்று சிருஷ்டிக்கப்பட்டது என்பதை விளக்கும் மதக் கோட்பாடு மற்றொன்றாகும். இக் கட்டுரையின் வாயிலாக விஞ்ஞானக் கோட்பாடான பரிணாம வாதத்தைக் குறித்து பரிசீலனை செய்ய விரும்பவில்லை ஏனெனில் உள்ளது சிறத்தல் என்னும் பரிணாமவாதம் பகுத்தறிவு வாதிகள் அறைகுறையாகவேனும் உணர்ந்ததேயாகும். ஆனால் மதக் கோட்பாட்டைப்பற்றிய வரலாற்றை இன்னும் லட்சக் கணக்கான ஜனங்கள் நம்பிவருவதால்; அதனுடைய பூர்வாங்கத்தைப் பரிசீலனை செய்து—அது எவ்வாறு இன்னும் நிலைபெறவாயின என்பதைக் குறித்தும் ஆராய்வோம். ஆதிகால மக்கள் அனைவருக்கும் தங்கள் தங்கள் உலக சிருஷ்டி வரலாறு கதைகள் உண்டு. இதில் யூதர்கள், கிறிஸ்தவர்கள், மகமதியர்கள் எல்லோரும் பங்கிட்டுக் கொள்ளும் விவிலியக் கதையே மிகச் செலாவணியானதாகும். ஹீப்ரு விவிலிய நூலை எழுதுவதற்கு முன் பல்லாயிர வருஷங்களாகப் பல்லோர் நம்பிவந்த ஓர் பழைய பாபிலோனியக் கட்டுக் கதையினின்றே, இவர்கள் எல்லோரும் காப்பியடித்துக்கொண்டார்கள்.

விவிலிய நூலை நுட்பமாகப் படித்துப் பார்ப்பவர்கள், அது ஆக்கப்பட்ட அக் காலத்திலேயே ஆசியா மைனரில் உலக சிருஷ்டி வரலாற்றைக் குறித்து இருதிறப்பட்ட கதைகள் நிலவியிருந்தன என்பதை உணரலாம். இந்த இரு கதைகளையும் வெளிப்படுத்துவது ஆதியாகமமாகும். இந்தக் கட்டுக் கதைகளின் நடைமுறை போக்கே இருசாரர்கள் எழுதினார்களென்பதை மெய்ப்பிக்கும். விவிலிய நூல் மேதைகள் இதை "இலோஹிஸ்டிக" என்றும் 'எஹோவிஸ்டிக்" என்றும் முறையே அழைக்கின்றார்கள். முதலாவது அதாவது எலோகிஸ்டிக் வரலாறானது ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தில் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாவது அதிகாரத்தின் மூன்றாவது செய்யுளோடு முடிவடைகிறது. இரண்டாவது அதாவது எஹோவிஸ்டிக் வரலாறானது ஆதியாகமத்தின் இரண்டாவது அதிகாரத்தின் நான்காவது செய்யுளிலிருந்து ஆரம்பித்து மூன்றாவது அதிகாரத்தின் 24-வது செய்யுள் வரை நீண்டிருக்கிறது. இந்த இரு வரலாறுகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள பெயர் காரண இடுகுறியாகும்.

அதாவது பர வஸ்துவைப்பற்றி முதல் நூலில் இலோஹிம் என்றும் இரண்டாவது நூலில் எஹோவா என்றும் கூறியிருத்தலாலேயாம். இலோஹிம் என்பது ஹீப்ருவார்த்தை. அதுவே எஹோவா. இதனுடைய நேர் பொருள் "கடவுளர்கள்". இது இன்றைய விவிலிய நூலில் "கடவுள்" என இடம் பெற்றிருக்கிறது. எஹோவா என்பதற்கு நேரடியான அர்த்தம் "கடவுளர்களுக்கும் கடவுள்" என்பதாகும். இலோஹிஸ்டிக் எஹோவிஸ்டிக் ஆகிய இரண்டிலும் நிலம் பயிர், ஜீவராசி, மனிதவர்க்கம் முதலிய தோற்றத்தைக் குறித்த வேறுபாடுகள் முதலியன கீழே காட்டியுள்ள ஏன்ஜிலிகன் சர்ச்சின் மிகப் பிரக்கியாதிபெற்ற வேதாந்தி பிஷப் ஜான்வில்லியம் கொலென்ஸோ அவர்களின் குறிப்பிலிருந்து தெரியவரும். (கொலென்ஸோ அறுபது ஆண்டுகளுக்கு முன்பு நெட்டால் பிஷப்பாக இருந்தவர். பைபிளைத் தக்க ஆதார பூர்வமாகக் கண்டனவாதம் செய்ததற்காக குற்றஞ் சாட்டப்பட்டவர்.)

மேற்கூறியஇரண்டுமுறைகளிலும் உள்ள குறிப்பிடத் தகுந்த இரண்டு வேறுபாடுள்ள விஷயங்கள் வருமாறு:—

1. முதல்நூலில்நீரிலிருந்து நிலம் வெளிப்பட்டது. ஆகையினால் ஈரம் எங்கும் வியாபகமாயிருந்தது. இரண்டாவதில் நிலப் பரப்பு பூராவும் ஈரம் ஆக்கப்படவேண்டியிருந்தது.

2. முதல் நூலில்மனிதனுக்கு முன் பக்ஷிகளும், பிராணிகளும் சிருஷ்டிக்கப்பட்டன. இரண்டாவதில் பக்ஷிகளுக்கும், பிராணிகளுக்கும் முன் மனிதன் தோன்றலானான்.

3. முதல்நூலில்பறக்கும்எல்லாப் பறவைகளும் நீரிலிருந்தே உண்டாக்கப்பட்டன இரண்டாவதில் ஆகாயத்தின் பறவைகள் நிலத்திலிருந்தே உண்டாயின.

4. முதல்நூலில் மனிதன் கடவுளின் பிரதிபிம்பமாகச் சிருஷ்டிக்கப்பட்டான். இரண்டாவதில் நிலத்தின் தூசியிலிருந்து மனிதன் தோற்றுவிக்கப்பட்டான். பின் உயிர்மூச்சினால் உயிர்ப்புப் பெற்றான். தடுக்கப்பட்ட பழத்தைப் புசித்த பின்னரே "நம்மைப்போல் நன்மை தீமையை அறிய மனிதன் ஆகிவிட்டான் பார்" என்றார் நம் பிதா கடவுள்."

5. முதல் நூலில் பூமி முழுமைக்கும் மனிதன் எஜமானனுக்கப்பட்டான். இரண்டாவதில் அவன் ஒழுங்குபடுத்தவும், பத்திரப்படுத்தவும் ஈடன் தோட்டத்திலே சும்மா வைக்கப்பட்டான்.

6. முதல்நூலில்ஆணும்பெண்ணும் சேர்ந்து சிருஷ்டிக்கப்பட்டார்கள். முழு சிருஷ்டியின் பூர்ணத்துவமாக ஏற்படுவதால் ஒருவருக்கொருவர் பரிபூரணமாக இவர்கள் இருவரும் சேர்ந்து ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இரண்டாவதில், ஆணுக்கும் பெண்ணுக்கும் மத்தியில் மிருகங்களும், பக்ஷிகளும் சிருஷ்டிக்கப்பட்டன. முதலில் நிலத்தின் தூசியிலிருந்து மனிதன் செய்விக்கப்பட்டான்; இவன் அவனாலேயே தோட்டத்தினுள்ளே வைக்கப்பட்டான். பரிசுத்தக் கட்டளையால் நிர்ப்பந்தப்பட்டான்; அதை மீறினால் சாபக் கேடு என்பதால் பயமுறுத்தப்பட்டான்; பின்னரே விலங்குகளும், பக்ஷிகளும் சிருஷ்டிக்கப்பட்டன. மனிதன் அவைகளுக்குப் பெயரிடுகின்றான். கடைசியாக இதற்கெல்லாம் இறுதியாக அவனுடைய விலா எலும்பிலிருந்து பெண் சிருஷ்டிக்கப்படுகின்றாள். அதுவும் மனிதனுக்கு வெறும் கூட்டாளியாக இருக்கவேயாம்.

இந்த ஹீப்ரு ஈடன் கட்டுக் கதைகளில், சுதாவாக எதுவும்உண்மையில்லை என்பதை மறுதளிக்கஎந்த வேறுபாடுகொண்டபோது ஜன அபிப்பிராயமுமில்லை. இதுபோன்ற கட்டுக் கதைகள் கற்பனை வரலாறுகள் எல்லாம் ஹீப்ருக்களுக்கு எந்தெய்வீக நூலாலும் தெரியப்படுவதற்கு நூறு நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உலகம் பூராவும் பேசப்பட்டு வந்திருக்கிறது. சால்டியா, பொனிசியா, பாபிலோன், இந்தியா, பெர்சியா. சைனா, ஈஜிப்ட், மெக்சிகோ முதலிய பாகங்களிலும் இவைகள் பிரசித்தம். இக் கதைகளோடு முதன்முதல் சம்மந்தங்கொண்டவர்கள் ஹீப்ருக்கள். அதுவும் (722, 705, கி. மு.) ஆசிரிய அரசர் இரண்டாவது சார்கன், இஸ்ரவேல்காரர்களை ஜெயித்து அடிமைப்படுத்தியபொழுதாகும். கிறிஸ்து பிறப்பதற்கு 1500, 2000 வருஷங்களுக்கு முன்பே சிருஷ்டிவரலாறு வீழ்ச்சி வரலாறு முதலியகதைகளும் ஜலப்பிரளய சம்பவம் பாபெல் கோபுரத்தைப்பற்றியும் வழங்கப்பட்டிருக்கின்றனவென்று 1573, 74-வருஷங்களில் மெசபெடோமியாவில் (Assyrian terra cott tables Prof ஜிபார் ஸ்மித் (of the Department of Antiquity, the Britsh Museum) பிரிட்டீஷ் மியூசியத்தார் கண்டுபிடித்துள்ளார்கள். பென்சல் வேனியா சர்வகலாசாலையின் (Assistant Professor of Assyriology) டாக்டர் எட்வர்ட் சிரா அவர்களின் கண்டுபிடிப்பினால் ஹீப்ருக்களின் சில கட்டுக் கதைகளுடைய பாபிலோனிய பூர்வாங்கத்தின் புதிய உண்மைகள் புலனுகின்றனவென்று 1932-வருஷ ஏப்ரல் மாதத்திய The New York Truth-Seeker கூறுகிறது. (இந்தக்கட்டுக்கதைகளை பாபிலோனியர்களிடமிருந்து ஹீப்ருக்கள் காப்பியடிக்கவில்லையென்று அநேக கிறிஸ்தவ பாதிரிகள்,குறிப்பாக கத்தோலிக்கர்கள் மறுதளிக்கலாம். அவர்களுடைய அபிப்பிராயத்தை மெய்ப்பிக்க அப்படி இருக்கமுடியாது,என்கிற நம்பிக்கையைத்தவிர்த்து வேறு எதைக் கொண்டும் நிரூபிக்க முடியாது.) டாக்டர் சிராவின் மூதனம் சுமேரியன் பாஷையில் செதுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துக்குமுன் 2100, 2500-வருஷங்களில்எழுத்துக்கள்களிமண்ணில் தோண்டி எடுத்து செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த செதுக்கலானது இதற்கு முன்னதான ஒரு பழைய ஆதியைக் கொண்டது. அதுவும் கிறிஸ்து பிறப்பதற்கு 4000 வருஷங்களுக்கு முன்னதானதைப் பார்த்து காப்பிசெய்ததாகும் என நினைக்கப்படுகிறது. ஆதி பாபிலோனியஈடன் கட்டுக்கதையில் கடவுளர்களுக்குள் ஒரு பெரும் போராட்டம் நிகழ்ந்த வரலாறு கூறப்பட்டிருக்கிறது. அதன்படிமனிதன்சிருஷ்டிக்கப்படவேண்டுமா? இல்லையா என்பதைக் குறித்து அவர்களால் முடிவுகட்ட முடியவேஇல்லை. ஒரு "புத்திசாலி" ஊர்வன,கிழடடைந்தசிறகுகொண்ட பாம்பான, Taimat ஆகியதுமனிதவர்க்கத்தின் சிருஷ்டியை எதிர்த்தது. பெரிய கடவுளான "பெல்" போடு பறவைப்பாம்பு போராடியது. இறுதியாக அவன்மீது இடியை உருட்டிவிட்டுகடவுள்வெற்றிகொண்டார். எதிர்ப்புகள் எல்லாம் நசுக்கப்பட்டதனால் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். பெல்லுக்கு பறவைப்பாம்புக்குமான போராட்டம் 'அபோகாலிப்ஸி'யால் குறிப்பிட்டுள்ள சுவர்க்கத்தில் நடந்த புரட்சிக்கதைக்கு நெருங்கிய நேர் ஒற்றுமையாக இருக்கிறது.

"சுவர்க்கத்தில் ஒரு சண்டை, நடந்தது. மைகேலும் அவனுடைய தேவதைகளும் பறவைப்பாம்போடு போராடினர், பறவைப்பாம்பு அவனுடைய தேவதைகளோடு போராடியது.

"யாரும் இதில் இடம்பெறவில்லை, சுவர்க்கத்தில் இனிமேல் இவரிருவருக்கும் இடம் காணப்படவில்லை. பெரிய பறவைப்பாம்பு வீழ்த்தப்பட்டது, சைசாக என்ற அழக்கப்படுகிற அந்தக்கிழப்பாம்பு—உலகத்தைப் பிரித்துவைக்கும் சைத்தான், பூமியில் வீசி எறியப்பெற்றது. அவனுடைய தேவதைகளும் அவனின்றும் வீழ்த்தப்பட்டனர்"

(Revelation xii, 7, 9)

### சுவர்க்க ராஜ்யத்தில் கடவுளும்

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க

# புரட்சி

ஈரோடு 1934- மார்ச்சு மீ 18-உ


## மீண்டும் சுயராஜ்ய கக்ஷியா?

:0:

காங்கிரஸ் ஒழிந்து விட்டதென்றும்... அதனால் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு இதுவரையில் விமோசனம் ஏற்படவில்லை என்றும், அதை இன்னும் உயிரோடு வைத்துப் பார்ப்பதில் யாதொரு சிறிய நன்மையும் பெற முடியாதென்றும், ஆனால் காங்கிரசை உயிர்ப்பிக்க காந்தி பக்தர்கள் முயற்சிப்பது நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டுமென்றே முட்டுக்கட்டை போடுவதாகுமென்பதோடு, அது பெரும் முட்டாள் தனமும் தற்கொலைக்குச் சமானமானதாகுமென்றும், இந்திய மக்களில் சகலரும் இன்று உணர்ந்து இருக்கிறார்கள்.

இந்த நிலையில் சில காங்கிரஸ் தலைவர்கள் சமீபத்தில் டில்லியில் கூடி, சட்டசபைகளைக்கைப்பற்றுவதா? இல்லையா? என்பதைக் குறித்து, தக்க முடிவிற்குவர முயன்றார்கள். ஆனால் இன்றைய தினம், காங்கிரஸ் கக்ஷியில் எந்த இருவர்களுடையஅபிப்பிராயமும் ஒரே விஷயத்தைக்குறித்துங்கூட முழுதும்ஒன்றாக பரிணமிப்பதில்லைஎன்கிறஇரகசியம் நாம்அறிந்ததேயாததால், அவர்கள் எந்த முடிவிற்கும் வராமல் கலைந்து போய் விட்டார்கள் என்பதில் நாம் சிறிதும்ஆச்சரியப்படவில்லை.

வர்ணாச்சிரம தர்மத்திற்கு மூலாம் பூசி, அது வேண்டுமென்று நம்பிக்கை கொண்டிருப்போரும், பழைய "ராம" ராஜ்யங்களை சிருஷ்டித்து, அதுவே குடிஆட்சி என்று நிலைநிறுத்தக் கங்கணங்கட்டிக் கொண்டிருப்போரும், ஜாதிப் பாகுபாடுகள், தொழில் வேற்றுமைகள் இவைகளை அறவே ஒழிக்கப் பயனுள்ள வேலைகளைச் செய்யாது, இவைகளையே இன்னும் நீடித்து வைத்திருக்க விரும்புவோரும், தீண்டாமை ஒழியவேண்டும் ஆனால் ஹரிஜனம் என்பதின் பேரால் தீண்டாதார்கள் சூத்திரர்களாகவே மதிக்கப்பட வேண்டுமென்போரும், மன்னர்கள் சமஸ்தானாதிபதிகள் முதலியோர் சாஸ்வதமாக ஆதிக்கமே செலுத்தி அரசுரிமை செய்பட்டுமென்போரும், பிரிட்டிஷாருக்கு இந்திய அரசியலில் முக்கியபாதுகாப்புகள் இருக்கட்டுமென்போருமான காங்கிரஸ்காரர்கள் இன்று சுயராஜ்யக்கட்சிப் போர்வையைப் போத்திக்கொண்டு, சட்டசபை ஸ்தாபனங்களைக் கைப்பற்ற, தங்களின் "பூர்வகால சம்பவங்களை" மறந்துவிட்டு வெளிவந்து விட்டார்கள்.

உதாரணமாக நமது மாகாண தேசீய வாதியான சத்தியமூர்த்தி தனது வடநாட்டு சுற்றுப்பிரயாணத்திற்கப்பால் கீழ்கண்ட செய்தியை பத்திரிகை நிருபருக்கு அறிவுறுத்தியுள்ளார். அதாவது "ஜனங்களிடையே கட்டுப்பாடு ஏற்படுத்தி மூன்றுகோடி 60 லக்ஷம் ஓட்டர்களுக்கும் ராஜீய ஞானம் உண்டுபண்ணி, அவர்களை ஒன்று திரட்டுவதே நாம் செய்யக்கூடிய வேலை. காங்கிரஸ் மகாசபை ஜனங்களின் உண்மையான பிரதிநிதி சபையென்பது வாஸ்தவமாயின், ஓட்டர்களின் ஆதரவைப்பெற்று அவர்களுடைய பிரதிநிதிகளாக இருந்து காங்கிரஸ்காரர்கள் வேலைசெய்ய வேண்டும். யார் தங்களுக்கு தெளிவான ஒரு வழியைக்காட்டப் போகிறார்கள் என்று மகாஜனங்கள் ஆவலாய் இருக்கிறார்கள்"

தோழர்களே! சத்தியமூர்த்தி போன்றவர்களின் ஆதிக்கத் தாண்டவத்திற்கு இடங்கொடுக்கப் போகின்றீர்களா? இவர்கள் முன் இருந்து சாதித்தது நாம் அறிந்ததுதானே! மற்றும் இப்பேர்க்கொத்தவர்களின் சிறிய எண்ணமும்கூட நம் நாட்டிற்கு எவ்வளவு அபாயகரமான தென்பதை விளக்கிக்கூறத் தேவையில்லை.

நமது இந்திய சட்டசபை-மாகாண சட்டசபைகள்-ஸ்தலஸ்தாபனங்கள் முதலியவைகள் இந்திய பொதுஜன பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பது உண்மை. ஆனால் பொதுஜனங்களுடைய பிரதிநிதிகள் மாத்திரம் அங்கு இல்லை. அங்குள்ளவர்களில் 100க்கு 98-பேர்கள் தங்களுக்கு மாத்திரமே, தாங்களே பிரதிநிதிகளென்னும் பணக்காரக்கூட்டத்தார், செல்வவந்தர் கூட்டத்தார், வகைதுகை அறியாத படித்த கூட்டத்தார் முதலானவர்களாவார்கள்.

இதைப்பார்த்து இன்றையதினம் நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஏழை மகனும், கூலிக்காரனும் தொழிலாளியும், விவசாயியும், கஷ்டப்பட்டு அவதிப்படுபவனுமாகியவர்கள், அதிருப்திப்பட்டு ஆத்திர மடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல மார்க்கம் ஏற்படவேண்டியது பெரிதும் அவசியமே.

ஆனால் இந்த நிலையில், சுயராஜ்யக்கட்சியாரின் சட்டசபைப் பிரவேசம், கஷ்டப்பட்டு அவதிப்பட்டு கொடுமைப் படுபவருக்கு, எரிகிற நெருப்பில் எண்ணை வார்ப்பது போன்ற கொடுமையாகுமேயன்றி வேறு எந்த சிறுகுண்டூசி நன்மையும் ஏற்படப்போவதில்லை என்பது பகிரங்க ரகசியம்.

இன்றைய மக்களின் விழிப்பிற்குக்காரணம், அவர்களின் சுயமரியாதை உணர்ச்சியேயாகும். இந்த விழிப்பானது நமது தமிழ் நாட்டில்மாத்திரம் நின்றுவிடாது, அகில இந்தியா முழுதும் ஏற்பட்டிருக்கிறது.

சமதர்ம சோஷியலிஸ்ட் அபிப்பிராயங்களைக்கொண்டு கேரளத்திலும், பஞ்சாபிலும், பம்பாயிலும், மத்திய மாகாணத்திலும், கான்பூரிலும், இன்னும் சில இடங்களிலும் தக்க இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு நல்ல வேலைகள் செய்து வருகின்றனர். இன்றைய தினம் இந்தியாவில் நிலைபெற்றுள்ள எல்லா விஷயங்களிலுமுள்ள அதிருப்தியை ஆங்காங்கு வெளிக்காட்டி வருகிறார்கள். அவர்களெல்லோரும் நம் நாட்டில் நிலவும் பல்வேறு விஷயங்களையும், முறைகளையும் அடியோடு மாற்றாமல் நம்முடைய ஜன சமூகத்திற்கு எவ்வித நன்மையையும், கொண்டு வந்து விடுவதென்பது முடியாத காரியமென்பதை உணர்ந்திருக்கிறார்கள். பல மக்கள் கஷ்டப்படுவது, சிலர் சுகம் அனுபவிப்பது என்கிற நிலை எந்த இடத்தில் எந்த அமைப்பில் இருந்தாலும் அடியோடு அழிக்கவே முயலவேண்டும்; முதலாளி தொழிலாளி என்கிற பேதமோ, ஆண்டான் அடிமை என்கிற அமைப்போ, தொண்டமான் தோட்டி என்கிற தொல்லையோ, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமோ யின்றி, எல்லோரும் சரி நிகர் சமமான அந்தஸ்து நிலை எய்தவேண்டுமென்கிற அழுத்தமான அபிப்பிராயம் எங்கும்ஊறிப்போய்விட்டது.

ஆகையால் சுயமரியாதைத் தோழர்களே! நாட்டின் உத்வேகம் நம் பக்கமே சார்ந்திருக்கிறதென்பதை உணர்ந்து நமது இயக்க லக்ஷியத்திற்கு விரோதமானவர்களையும் நம லட்சியத்தை நன்குஉணர சந்தர்ப்பம் கொடுத்து நாமே எங்கும் ஆதிக்கமும், பலமும், செல்வாக்கும் பெற வேண்டுமென்பதில் அதிகக் கவலையும், ஊக்கமுமெடுத்துத் தளராது உழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

நமது தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாணச் சமதர்மப் பேருரையில் "சமதர்ம ஞானத்தைப் பொது மேடைகளிலிருந்து தெரிவிப்பதுடன், சட்டசபைகளிலும், மற்ற ஸ்தாபனங்களிலும் நுழைந்து பொது மக்களிடம் நெருங்க வேண்டுமென்று" கூறியிருப்பதை ஒவ்வொருவருக்கும் ஞாபகமூட்டுகிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சமீபத்தில் 4-வது சுயமரியாதை மாகாண மகாநாட்டை நாளது ஆகஸ்டு மாதத்தில் திருச்சியில் கூட்டுவதென்று நமது சுயமரியாதைச் சங்கத்தின் மத்திய சபைக் கூட்டத்தார் கடந்த 11-ந் தேதி சென்னையில் கூடி தீர்மானித்திருப்பது மிக விசேஷிக்கத் தக்கது. இதன் விபரம் பிறிதொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். எனவே, நமது தோழர்கள் யாவரும் நமது இயக்க வளர்ச்சிக்குத் திருச்சியில் ஒன்றுகூடி மேற்காட்டிய நல்ல முடிவிற்கு வரக் கோருகிறோம்.

அதோடு நம் நாட்டின் பழைய வர்ணாஸ்ரம தர்மத்தை யொத்த இன்றைய முதலாளி, தொழிலாளி என்ற முறையையும் புரோகிதர் ஆட்சியையும், வியாபாரிகள் கொள்ளையையும் பணக்காரர்கள், சிற்றரசர்கள் போன்றவர்களின் ஆதிக்கத்தையும் மறைமுகமாகவேனும் ஆதரிக்க ஒருப்படும் எந்தக் கட்சியானாலும் அது தக்கவாறு திருந்தி சமதர்ம லக்ஷியம் பெறச் செய்வதும் நமது கடமையாகும். மற்றும் நமது இயக்க வேலைத் திட்டமாகிய பொதுவுடமைத் தத்துவத்தை அதாவது நிலங்கள், தொழிற்சாலைகள், போக்குவரத்து வசதிகள் முதலியனவற்றை பொதுவாக்கி அந்தந்த ஸ்தாபனங்களில் உழைத்து வரும் விவசாயிகள், தொழிலாளர்கள் முதலியவர்களுக்கு அதனுடைய வருமானங்கள் யாவற்றையும் உபயோகப்படச் செய்து உழைக்கத் தக்க முன்னணி வேலைத் திட்டத்தை தீவிரப்படுத்துமாறும்கேட்டுக்கொள்கிறோம்.

மற்றும் தோழர் C. D. நாயகம் அவர்களின் கட்டுரையை இவ்வாரம் புரட்சியின் 3ம் பக்கம் பிரசுரித்திருப்பதை வாசகர்கள் ஊன்றிப் படித்தால் எந்தத் திட்டம் மக்களுக்குப் பயன் படுமென்பது, விளங்காமற் போகாது.

## துணுக்குகள்.

### பட்டினிக் குரல் கேட்க வில்லையா?

இவ்வாரத்தில் லண்டனில் லார்டு லெஸ்டியும், சர் எட்மெண்டு லெஸ்டியும் மாதாக் கோவிலுக்குக் கோபுரம் கட்டுவதற்கு இரண்டுலட்சத்து இருபதினாயிரம பவுன் நன்கொடையளித்திருக்கிறார்கள். இவர்களுக்கு அங்கு பட்டினியின் மிகுதியால் அவதிபபடும் பாட்டாளியின் கூக்குரல் காதுகளில் விழவில்லையா? லண்டன் ஹைடு பார்க்கில் 75000 பட்டினி வீரர்கள் ஏட்டு மேடைகளில் அலறிபதை, அந்த மதப் பித்தம்பிடித்த கடவுள் வெறியர்கள் சிறிது சிந்தித்துப் பார்த்திருந்தால் "இயேசு" கோபித்துக் கொண்டிருப்பாரோ?

### பாசிசமா? சோஷியலிசமா?

மேனாடுகளில் "பாசிசம்," "சோஷியலிசம்" என்று அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தலைமை ஸ்தானமான பிரிட்டனில் இன்று பாசிசம் முறியடிக்கப்பட்டிருக்கிறது. லண்டனில் நிகழும் கவுண்டி கவுன்சில் எலக்ஷன்களே பார்லிமெண்டரி எலக்ஷன்களின் எதிர்காலத்தைக் குறிப்பிடுவதாகும். லண்டன் முனிசிபல் எலெக்ஷன்களான கவுண்டி கவுன்சில் தேர்தலேதான் இன்றையதினம் பார்லிமெண்டுக்கு அடுத்த முக்கியமானதாகும். இபபோர்க்கொத்த தேர்தலில் தொழிலாளர்களே, முன்னையைவிட நன்கு வெற்றிபெற்றிருக்கிறார்கள். எலெக்ஷன்களுககுமுந்தி 34 ஸ்தானங்களே பெற்றிருந்த தொழிலாளர்கள், இன்று 69 ஸ்தானங்களைக் கைப்பற்றவிட்டார்கள். லண்டன் கவுண்டி கவுன்சிலில் தொழிலாளர்கள பெரும்பான்மை யோர் ஸ்தானம் பெற்றது இதுவேதான முதல் தடவையாகும. இதிலிருநதே, பாசிசமா? சோஷியலிசமா? மேனாடுகளில் தலைநிமிரும் என்பதைக்கவனிக்கவும்.

சர். கே. வி. ரெட்டி சென்னை சர்க்கார் சட்ட மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மே தினக் கொண்டாட்டம்.

சர்வ தேசங்களிலுமுள்ள தொழிலாளர்கள்,- ஆண்களும் பெண்களும்—மே மாதம் 1ம் தேதியை "தொழிலாளர் தின"மாகக்கொண்டாடி வருகிறார்கள்.

பொதுவுடைமை ரஷ்யாவில், தொழிலாளர்கள் தாங்கள் வெற்றி பெற்றுவிட்ட சந்தோஷத்தையும், பூரிப்பையும் எடுத்துக்காட்டுகிற தோரணையில் மே தினத்தைக் கொண்டாடுகிறார்கள்

பிறதேசங்களில், தொழிலாளர்களின் குறைப்பாடுகள் பகிரங்கப்படுத்தி, பரிகாரம் வேண்டுகிற முறையிலும், தொழிலாளர்களின் சுபீக்ஷ வாழ்க்கை, பொதுவுடைமையாலும், தொழில் நாயக அரசாலும் (ergotacracy) அதாவது தொழிலாளர் குடி அர (Proletaian democracy) சாலுமே சித்திக்குமெனத் தீர்மானிக்கும் முறையிலும் மே தினம் கொண்டாடப்படுகிறது.

இந்தியாவிலும், சில வருஷங்களாக மேதினம் இங்கொரு இடத்தில் அங்கொரு இடத்திலாகக்கொண்டாடப்பட்டு வருகிறது. சென்ற வருஷத்தில், இந்தியாவில் பல இடங்களில் கொண்டாடப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டிலோ, இரண்டொரு இடத்தில்தான இவ்விழா மே மாதம் முதல் தேதி கொண்டாடப்பட்டது. பின், தோழர் ஈ. வெ. ரா. அவர்களின் வேண்டுகோளின்படி மே மாதம் 21ம் தேதி பலவிடங்களில் கொண்டாடப்பட்டது.

சு. ம. வீரர்களே! சமதர்மிகளே! தொழிலாளர்களே! தோழர்களே! இந்த வருஷத்தில், மே தினத்தைத் தமிழ் நாட்டின் ஒவ்வொரு ஜில்லாவிலும், நகரங்கள் தோறும், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைத் திரட்டி, வெகு விமரிசையாக நடத்தவேண்டும். தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் சிறைவாசம் செய்வதால் ஏற்படும் நமது அதிகப்படியான பொறுப்பை உணர்ந்து, மே தினத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு, நமது தோழர்கள் தொழிலாளர்களிடையில் பிரசாரம் செய்யவும், வேறு சாதகங்கள் பெறவும், இம்முயற்சியில் இப்பொழுதிருந்தே ஈடுபடவேண்டும்.

இங்ஙனம்,

ப. ஜீவானந்தம்,
சி. நடராஜன்,
அ. பொன்னம்பலம்,
எஸ். வி. லிங்கம்.

தமிழ் பாஷையின் முன்னேற்றத்திற்கு
முட்டுக்கட்டையாயிருந்தவர்களும்—
தமிழை வளர்த்த சமணர்,பௌத்தர் முதலியவர்களை
சூழ்ச்சியால் கொன்ற சைவர்கள்—இல்லை—
வேளாளர்கள், தமிழர்களின் பேரால்
திருநெல்வேலியில் மகாநாடு கூட்டுகிறார்கள்.
**தமிழர்களே! ஏமாந்துவிடாதீர்கள்.**

## சர்ச்சுகளின் நிலைமை.

ரெவரெண்டு சார்ல் ஜ்டைடன் அமெரிக்க சர்ச்சுகளைப்பற்றி எழுதுவது:—

1931 லிருந்து 1933வரை, 'பிரஸ்பிடீரியன்' சர்ச்சுக்காரர்களுக்கு 10,56,004 பவுன் வருமானம் குறைந்து போயிற்று. அதாவது இவர்களுக்கு 100க்கு 35 பவுன் குறைந்து போயிற்று. மேலும்வடக்குதேச பிரசாரசபை தன்னுடைய காரியத்தைச் செவ்வனே செய்வான் வேண்டி, ஆரம்பஅரைவருடத்துக்காக 2550,000 பவுண்டு அவசியமெனக் கோரியிருந்தது. ஆனால் இதற்காக 13,47,000 பவுன் குறைந்து, பாக்கித் தொகைதான் கைக்குக் கிட்டிற்று. இதுவுமல்லாமல் அன்னிய நாடுகளில் கிறிஸ்துமதப் பிரசாரம் செய்வான் வேண்டி இந்த அமெரிக்காவின் பால் நிர்மானிக்கப்பட்டிருக்கும் போர்டு 1933-ஜனவரி முதல் மே மாத இறுதி வரையில் 100க்கு 46-பவுன் வருகானம் குறைவாகவே வந்திருக்கிறதென அந்தபோர்டு ரிப்போர்ட் வெளியாக்கியிருக்கின்றது. இப்படியே, மெத்தோடிஸ்ட் சர்ச், லூதரன் சர்ச், இபிஸ்கோபில் சர்ச் முதலியவைகளுக்கும் முறையே இங்ஙனமே வருவாய் குறைந்து போயிற்று.

1906 – 1926 வரை அமெரிக்காவின் சர்ச்களுக்கு, 100க்கு 45 அதிக வருமானம் வந்துகொண்டிருந்தது. ஆனால் இதுசமயம் அதற்கெதிராய் 100-க்கு 300 அதிகமாய் சர்ச்கள் கடன் கொடுக்க வேண்டியவைகளாயிருக்கின்றன.

பிலடல்பியா, வாஷிங்டன், நியூயார்க், சிகாகோபோன்ற தமது தலை நகரங்களிலிருக்கும் பெரிய பெரிய தேவாலயங்களெல்லாம் கடன் பட்டனவாகவும் அழிந்துகொண்டே செல்லுவனவாயிருந்து கொண்டிருக்கின்றன.

இதற்குமுன், தேவாலயங்கள் விஷயங்களில் பணம் கொடுத்துப் பிரயோஜன மடைய வேண்டுமென்று பிரசாரம் செய்து கொண்டிருந்த ஸ்தாபனங்கள், இப்போது பணங்களைக் கொடுத்து ஏமார்ந்து போக வேண்டாமென கூறிக்கொண்டிருக்கின்றன.

## புதுப்பாளையம்.

### சமதர்ம வாசகசாலை.

வாராந்திரக்கூட்டம்.

18-2-34ந்தேதி மாலை 4மணிக்கு வாராந்தரக்கூட்டம் தோழர் எம் நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. "மாதர் சுதந்திரம்" என்பதுபற்றி தோழர்களான பி. கிருஷ்ணன், எ. முத்துகிருஷ்ணன், பி. ஆர். குப்புசாமி, வி. தங்கவேலு ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இரவு 8மணிக்குக் கலைந்தது.

25-2-34 மாலை 4-30மணிக்கு வாசக சாலையின் வாராந்தரக் கூட்டம் தோழர் கு. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கல்வி' என்பது பற்றி தோழர்களான பி கிருஷ்ணன், எ. முத்துகிருஷ்ணன், எம். நாராயணசாமி, ஆகியோர் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் கலைந்தது.

4-3-34 மாலை 4மணிக்கு வாராந்தரக் கூட்டம் தோழர் பி. ஆர் குப்புசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. "மனித வாழ்க்கையும், சமதர்மமும்" என்பது பற்றி தோழர்களான, எ. முத்துகிருஷ்ணன், வி. தங்கவேலு, வி. பி. குப்புசாமி, ஆர். சபாபதி, பி. கிருஷ்ணன், தே. ஆறுமுகம் ஆகியவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 8மணிக்கு கலைந்தது.

11-3-34 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு வாசகசாலையின் வாராந்திரக்கூட்டம் முத்தனூர் தோழர் கோபாலகிருஷ்ணன். அவர்கள் தலைமையில் நடந்தது. "புரட்சி" "பொதுவுடமை" என்பவைகளைப் பற்றி தோழர்களான வி- தங்கவேலு, ஆறுமுகம், பி. ஆர். குப்புசாமி, எ. முத்துகிருஷ்னன், பி கிருஷணன் ஆகியோா சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் மாலை 6-30மணிக்கு கலைந்தது.

---

## சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

இம்மன்றத்தின் கூட்டம் 4-3-34 ஞாயிறு பகல் 2 மணிக்கு 221 தங்கசாலை வீதியில் தோழர் கே. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் தோழர் எஸ். குருசாமி பி. ஏ. அவர்களால் கொண்டுவரப்பட்டு தோழர்கள். எல். இராமசாமி, சி. டி. நாயகம்ஆகியவர்களால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஏகமனதாக நிறைவேறியது.

தீர்மானங்கள்.

(1) தமிழர் மகாநாடு பலசமயத்தினர் உட்கொண்ட தமிழர் தமிழ்மொழி உயர்வையேமுக்கியநோக்கமாகக்கொண்டதாகையால், அம் மகாநாட்டில் ஒரு சமயத்தை ஒட்டிய குறிகளையாவது, கொள்கையையாவது கைக்கொள்ளக்கூடாது என்று இம்மன்றம் வற்புறுத்தி வேண்டிக் கொள்கிறது

(2) தமிழ் எழுத்துக்களில் காலத்திற் கேற்ற மாறுபாடு அவசியமா என ஆராயவும், அவசியம் எனப்பட்டால் என்ன மாறுபாடு செய்யலாம் என ஆராயவும் பல பிரிவினர்களை அடங்கிய தமிழர்களை ஒரு கூட்டமாக நியமிக்க தீர்மானிக்க வேண்டுகிறோம்.

(3) தமிழ் மகாநாட்டில் மேற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றவும், பிற்போக்கான தீர்மானங்கள் நிறைவேறாமல் தடுக்கவும், தமிழ்நாட்டிலுள்ள சுயமரியாதை, சமதர்ம, அறிவு ஆராய்ச்சி சங்கங்கள் கூடியவர்களை எல்லாம் அம் மகாநாட்டிற்கு போக வற்புறுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

(4) பல இடங்களிலுமுள்ள மற்ற சுயமரியாதைக் கொள்கைகளையுடைய சங்கங்களும் மேக்கண்டவாறு தீர்மானங்கள் செய்து விரைவில் மகாநாட்டிற்கு அனுப்பும்படி இம்மன்றம் கேட்டுக் கொள்ளுகின்றது. எனக்காரியதரிசி எல். ரங்கநாதன் எழுதுகிறார்.

---

## சுயராஜ்யம் யாருக்கு?

(ஆசிரியர்:- தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்)

சுயராஜ்யம் யாருக்கு என்ற புஸ்தகத்தின் மூன்றும் பாகம் அதாவது எது வேண்டும்? சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகம் அச்சாகி விட்டது. புஸ்தகம் வேண்டுமென்று ஏற்கனவே பணமும், ஸ்டாம்பும் அனுப்பியவர்களுக்கு, இவ்வாரத்திற்குள் புஸ்தகங்கள் அனுப்பப்படும். சொற்ப காப்பிகளே கைவசமிருப்பதால், புஸ்தகம் வேண்டுவோர் முந்திக்கொள்ள வேண்டும்.

சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்கள்:—

உலக முக்கிய பிரச்சினை, தேசியமும், மூட நம்பிக்கையும், சுயராஜ்யமும் தனி சொத்துரிமையும் சமதர்ம லக்ஷணம், சமதர்மத்தில் குடும்பம், மதம், ஜாதி, தேசிய அரசுகள் இருக்கா, சமதர்ம ஆக்ஷிமுறை, ஜாதி மதம் ஒழிக்கும் வழி, தனிவுடமையின் கொடுமை, பொதுவுடமை விளக்கம், சமதர்மத்தில் பொருள்கள் விநியோகம் சுயராஜ்பமா? சமதர்ம ராஜ்யமா?

இதன் விலை 0—3—0

கிடைக்குமிடம்:—

சமதர்மப் பிரசுராலயம்,
22, சவுத்பிச்ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

## முத்தனூர்.

### சமதர்ம வாசகசாலை. திறப்புவிழா.

புதுப்பாளையத்திற்கு அடுத்த முத்தனூர் கிராமத்தில் 10-3-34 சனிக்கிழமை மாலை 4மணிக்கு சமதர்மவாசகசாலை ஒன்று புதிதாய் ஏற்படுத்தப்பட்டது. புதுப்பாளையம் பி. ஆர். குப்புசாமி அவர்கள் வாசகசாலையைத் திறந்து வைத்தார். அவ்விழாவிற்கு புதுப்பாளையம் சமதர்ம வாசகசாலை தலைவர் தோழர் கு ஆறுமுகம் அவர்கள் தலைமை வகித்தார். பிறகு தோழர் வி. தங்கவேல் அவர்கள் 'ஆரியர் சூழ்ச்சி" என்பதைப்பற்றியும், தோழர் எ. முத்துகிருஷ்ணன் அவர்கள் "மனித வாழ்க்கை" என்பதைப்பற்றியும், தோழர் பி. கிருஷ்ணன் அவர்கள் "முன்னேற்றம்" என்பதைப் பற்றியும், தோழர் என் எஸ். சோமசுந்தரம் (போட்டோ கிராபர்) அவர்கள் மேற்கண்டவர்கள் பேசியதை பின்பற்றியும் சொற்பொழிவாற்றினார். பின்னர் கீழ்கண்டவர்களை வாசகசாலையின் நிர்வாக அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:—
தோழர் அப்பாய்.

உபதலைவர்:—
தோழர் கெங்காதரம்

காரியதரிசிகள்: —
தோழர் எம் பி. குருசாமி
கு. நடேசன்.

பொக்கிஷதார்:—
தோழர் ரங்கையா

அங்கத்தினர்கள்:— தோழர்கள் தாண்டவராயன், என் ராகவன், ஜி. கிருஷ்ணமூர்த்தி, ம- தங்கவேல், பெருமாள், இராஜமாணிக்கம் கோ. பெ. பச்சியப்பன் ஆகியவர்கள் தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் மாலை 6மணிக்கு இனிது கலைந்தது.

---

## திருத்த மறுமணம்.

சிங்கப்பூர் சிலிகிரோட் 74-ெந. இல்லத்தில் 28-2-34ல் ஜனவர்த்தமானி ஆசிரியர் எம். எஸ். மாலிம் அவர்கள் தலைமையின் கீழ் முன்னறிக்கை அழைப்புப் பிரகாரம் தோழர் ஜெகதாம்பாள் புதல்வி தோழர் லக்ஷிமிஅம்மாளுக்கும், தோழர் பச்சையம்மாள் புதல்வன் தோழர் சாமிநாதனுக்கும் முறையே திருத்த மறுமணம் டி. கே. ஆத்மலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வாழ்க்கை ஒப்பந்தம் கூட்டுவிக்கப்பட்டது. அவ்வமயம் தோழர் கோ. ராமலிங்கம் "திருத்தமணம்" என்பது பற்றியும், தோழர் தி. பொ. ராமசாமி 'தமிழ்' என்பது பற்றியும் தோழர் எஸ். ஒழிமுகமது 'அன்பு' என்பது பற்றியும், தோழர் வீரப்பன் "மறுமணம்" என்பதுபற்றியும், தோழர் பி. கோவிந்தசாமி "மலாய் நாடு" என்பதுபற்றியும், தோழர் தி. ப. ராமசாமி கல்வி என்பதுபற்றியும், தோழர் கே. ஏ. பண்டிதர் அவர்கள் பழயன கழிதலும், புதியனபுகுதலும் என்ற விஷயங்களைப் பற்றி சொற்பெருக்காற்றிய பின் தலைவரின் முடிவுரையுடன் தம்பதிகளிருவரும் வந்திருந்த ஏனையோர்க்கும் வணக்கம் அறிவித்த பின் இரவு சுமார் 11 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது, என எஸ் வேலாயுதம் அறிவிக்கிறார்.

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவன்களும்ஒருபுறம், பைசாசுகளும் அதனுடைய திருக்கூட்டமும் மற்றொரு புறம் போராடுவதுதான் பழையபர்சிய மதத்தில் நாம் காணும் மிக முக்கியதத்துவமாகும் கடவுள்களுக்கு அடிக்கடி போராட்டம் நிகழ்ந்து வந்திருக்கின்றன வென்றே கிரேக்கர்களும் ரோமர்களும் நம்பினர். மெக்சிகர்கள் இவ்விதம் நம்பினார்களென்று இஜிப்தியர்களும் நம்பினார்கள். வெளிச்சத்திற்கும் இருட்டிற்கும் சக்திகள் உண்டாம், இந்த சக்திகளுக்குள் கடுமையானபோராட்டங்களாம். இதுவே ஜொராஸ்டிரியன் மதத்தின் தத்துவம்.

---

## ஈரோடு ஆறாவது வருஷ எங்மென் யூனியன் கால்பந்து விளையாட்டு.

1934-ஹு ஏப்ரல்-மீ கடைசி வாரத்தில், எங்மென் யூனியன் கிளப், ஆதரவின் கீழ் கால்பந்து விளையாட்டு ஒன்று (Foot- Ball Sevens) நடைபெறும். இதற்கு நமது மாகாணம் முழுவதிலுமுள்ளவர்கள் விளையாடுவதில் பங்கெடுத்துக்கொளளலாம். 50மைல்களுக்கு அப்பால் இருந்து வரும் டீம்களுக்கு சாப்பாடு வசதியும், ஜாகை வசதியும் இலவசமாக அளிக்கப்படும். டீம் ஒன்றுக்கு ரூ. 4-0-0 பிரவேசக்கட்டணம் அனுப்பவேண்டும். 17-4-34-ந் தேதிக்குள் பணமும் விண்ணப்பமும் சேர்ந்துவிட வேண்டும். ஷை தேதிக்குப்பிறகு அனுப்பப்படும் விண்ணப்பங்களும், பணம் இல்லாமல் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் அவசியம் கவனிக்கப்படமாட்டா. இது சம்பந்தமான விஷயம் தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதி தெரிந்து கொள்ளவும். (இடம் கிடைக்க காலதாமதம் ஏற்பட்டதால் 4-3-34ல்-அறிவித்தபடி நடத்த முடியாமைக்கு வருந்துகிறேன்.)

E. K. Abdul Kareem Sahib,
Salt Merchant, Erode.

## சேலம் ஜில்லா
# 3வது சுயமரியாதை மகாநாடு.

13-3-34-உ திங்களன்று கிருஷ்ணகிரி சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தில், நகர் பிரபலஸ்தர்கள், தாலூகா போர்டு மெம்பர்கள், இவர்களின் கூட்டம் நடைபெற்றது. வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்கள் தாலூகா போர்டு தலைவர் டி. கிருஷ்ணமூர்த்தி கே. பி. தொப்பண்ணன் எம். சி. கோவிந்தராஜலு, இ. டி. ராமச்சந்திரன், பேங்கர் கே. வி. குப்புசாமி வக்கீல், பி. எம். முனிசாமி, ஏ. வி. கிருஷ்ணன் முதலியவர்களாவார்கள். தாலூகாபோர்டு தலைவர் தோழர். டி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்கள். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

(1) கிருஷ்ணகிரி சுயமரியாதை சங்கத்துக்கு பேங்கர். ஈ. டி. ராமச்சந்திரன் தலைவருகவும், பி. வெங்கிட கிருஷ்ணன் பொக்கிஷதாருகவும், என். ராமச்சந்திரன் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(2) சேலம் ஜில்லா 3-வது சுயமரியாதை மகாநாட்டை வாளது மே மாதத்தில் கிருஷ்ணகிரியில் நடத்துவதென்று தீர்மானிக்கிறது.

(3) மகாநாட்டை கிருஷ்ணகிரியில் நடத்த ஜில்லா சுயமரியாதை சங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

இத்தீர்மானங்கள் நிறைவேறியதும் இரவு 8-30 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது. நகர் யூனியன் போர்டு தலைவர் ஜி அனுமந்தன் அவர்களால் இரவு சகல தோழர்களுக்கும் ஓர் விருந்து அளிக்கப்பட்டது.

குறிப்பு—கிருஷ்ணகிரி சுயமரியாதைத்தோழர்கள், மகாநாடு நடத்துவது பற்றி சென்னையில் நமது மாகாண சுயமரியாதை நிர்வாகக் கமிட்டி கூட்டத்தார் செய்துள்ள தீர்மானங்களைக்கவனித்து நடந்துகொள்ளுவார்கள் என்று நம்புகிறோம். (ப-ர்)

## சுயமரியாதை முழக்கம்.

தோழர்கள் ராமசுப்பிரமணியம், எஸ். நீலாவதி, எஸ். வி. லிங்கம் ப. ஜீவானந்தம், இவர்கள் 11-12 தேதிகளில் கிருஷ்ணகிரியில் இரண்டு பொதுக்கூட்டங்களில் "சமதர்ம"ப் பிரசாரம் நடத்தினர்கள்.

16-உயன்று திருப்பத்தூர் காந்தி மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் தோழர்கள் ப. ஜீவானந்தமும், எஸ். வி. லிங்கமும் உபன்னியசித்தார்கள்.

20-உயிலிருந்து, கோலார், பெங்களுர், ஜோலார்பேட், வாணியம்பாடி, குடியாத்தம், வேலூர் இவ்விடங்களுக்கு சென்று சமதர்ம பிரசாரம் செய்வார்கள்.

## கோயமுத்தூர் ஜில்லா
### ஹரிஜனக்கமிட்டியும், பார்ப்பன சூழ்ச்சியும், பணக்கார சூழ்ச்சியும்.

### தோழர் R. C. காவேரி, தோழர் M. A ஈஸ்வரருக்கு அழைப்பில்லை.

கோயமுத்தூர் ஜில்லாவில் இம்மாதம் 11-ம் தேதி ஜில்லா ஹரிஜன ஊழியர்கள் கூட்டம் என்று ஒன்று தோழர் கே. சுப்ரி அவர்களாலும், தோழர் அவனுசிலிங்கம் செட்டியார் அவர்களாலும் நடத்தப்பட்டது. இந்தக்கூட்டத்திற்கு தோழர் ஆர். சி. காவேரி அவர்களுக்கும், தோழர் எம். ஏ. ஈஸ்வரன் அவாகளுக்கும், அழைப்புக்கடிதமே அனுப்பப்படவில்லை. தோழர் எம். ஏ. ஈஸ்வரன் 1921-ல் காந்தியவர்கள் ஒத்துழையாமை ஆரம்பித்தகாலம் முதற்கொண்டு சட்ட மறுப்பு செய்ய வேண்டுமென்று காந்தியவர்கள், கட்டளையிட்ட ஒவ்வொருதடவையும், சிறை சென்றவர். கடைசியாக தனிப்பட்ட முறையில் சட்டமறுப்பு செய்யவேண்டும் என்று காந்தியவர்கள் கட்டளைப்படி சிறை சென்று இம்மாதம் 1-ம் தேதிதான் கோயமுத்தூர் சிறையினின்று விடுதலையானவர் இதுவரை காங்கிரஸ் இயக்கத்தில் 6 தடவை சிறைசென்று திரும்பியவர். தீண்டாதாருக்காக ஒருதடவை, ஆலயப்பிரவேசம் செய்து சிறைசென்றவர். இவருக்கு மேற்படி கூட்டத்திற்குவர ஒரு அழைப்புக்கடிதம் அறுப்பப்படுவதற்கு தகுதியில்லையா? இவர் அவனுசிலிங்கம் செட்டியாரைப்போல் பணக்காரர் அல்ல. தோழர் கே. சுப்ரியைப்போல் பார்ப்பனர் அல்ல.

தோழர் ஆர். சி. காவேரி அவர்கள் பிரபல குடும்பத்தைச்சேர்ந்த பிரபல நூல் வியாபாரி, பணக்காரர், வயது 19. காந்தியவர்கள் தனிப்பட்ட முறையில் சட்டமறுப்பு செய்யவேண்டுமென்று கட்டளையிட்டபொழுது, அவர் கட்டளைப்படி சிறைசென்று திரும்பியவர். இதுவரை தமிழ்நாட்டில் (அதாவது 1921-ம் வருஷம் முதற்கொண்டு) எவருக்கும் அதிகப்படியாக விதிக்காத அபராதமாகிய 1000 ரூ. விதிக்கப்பட்டவர். இவருக்கு மேறபடி கூட்டத்திற்குவர அழைப்பேயில்லை. இவர் பார்ப்பனர் அல்ல. இவர்கள் இருவரும் சமதர்மத்திற்கு பாடுபடுகிறவர்கள்.

மேற்படி கூட்டமானது உண்மையாக ஹரிஜனங்களுக்கு ஏதாவது உதவிசெய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்பட்ட கூட்டமல்ல. அவனுசிலிங்கம் செட்டியார், வரப்போகிற சட்டசபை தேர்தலுக்கு, கோயமுத்தூர் ஜில்லாவில் அபேக்ஷகராக நிற்கப்போகிருர். இதற்காக கூட்டப்பட்ட கூட்டம் தானேதவிர வேறு ! அல்ல. இத்தமாதிரி கூட்டத்திற்கு, தோழர் எம். ஏ. ஈஸ்வரரையும், தோழர் ஆர். சி. காவேரியையும் அழைத்தால் கோரினகாரியம் நிறைவேறாது என்று அழைக்கப்படவில்லை போல் தெரிகிறது. அவர்களுக்கு அழைப்புக்கடிதம் அனுப்பப்படாவிட்டாலும், அவர்களைப்பொறுத்தமட்டில் அவர்கள் தங்கள் தாலூகாவில், தங்களால் கூடியதைசெய்ய தயாராகஇருக்கக்கூடியவர்கள் என நமது விசேஷ நிருபர் எழுதுகிருர்.

## சாக்கடை தண்ணீரில்
# பெண் குழந்தை.

நாகபட்டணம் 10-3-34.

இவ்வூர் முதலியைன் பீச்சு இம்பீரியல் பேங்கின் கட்டிடத்தின் தென்புரம்உள்ள சாக்கடையில் சுமார் கர்ப்பத்தில் 7-மாதம் மதிக்கக்கூடிய ஒரு பெண சிசு ஒருவித காயமின்றி இறந்து குப்பைகளொடு சேர்த்து போடப்பட்டிருந்தது. அந்த சாக்கடையில் தண்ணீர் ஓட்டம் ஜாஸ்த்தியாயில்லாததிருந்ததால் ஷை சிசு தண்ணீரோடு உப்பாற்றிற்கு போகமுடியாமல் அந்த சாக்கடையில் தடைப்பட்டதென யூகிக்கப்படுகிறது. அன்று போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் உள்பட பல போலீஸ் கான்ஸ்டேபிள்களும் அந்த சிசு இறந்துகிடந்த இடத்திற்கு வந்து இறந்துகிடந்த சிசுவை எடுத்து போலீசார்களின் உத்தியோக சடங்கை நடத்தியபின் குழந்தையின் பிரேதம் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு பிரேத விசாரணைக்கக் கொண்டுபோகப்பட்டது.

அச்சிசு இறந்து அந்த சாக்கடையில் கிடக்க காரணம் என்னவென்பதைப்பற்றியும், எக்காரணத்தால் அச்சிசுவை வதைசெய்திருப்பார்கள்என்பதைப்பற்றியும் வாசகர்களே வெகு சுலபத்தில் ஊகித்துக்கொள்ளலாம்.

இதிலிருந்து நமக்கு என்ன விளங்குகிறதென்ருல், மதத்தின் மூடகட்டுப்பாடுகளின் கோற செயல்களைப் பற்றியும், ஜாதிமத அபிமானத்தின் மடத் தன்மைகளைப்பற்றியும், விதவா விவாகத்தை மறுதளித்து மூட்டுக்கட்டைபோட்டு வர்ணாச்சிரமத்திற்கு நீர்ணிபோட்டு வளர்த்துவரும் வர்ணாச்சிரமிகளின் பச்சை அயோக்கியததன்மைகளையும் வெளிப்படுத்தாமல் போகாது எனப் புலப்படுகிறது.

இப்பேர்பட்ட கோர செயல்கள் இந்நாட்டில் நடவாவண்ணம் கற்பிக்கும், போதிக்கும், பாடுபட்டும் வரும் சுயமரியாதை இயக்கத்தின் லக்ஷியங்களைக்கண்டு பொருமைப்பட்டு எதிர்க்கும் சுயநலப்பிரியர்களான பிரகஸ்பதிகள் இந்நாட்டைவிட்டு என்றுதான் விரட்டப்படுவார்களோ அந்நாளே நன்னாளாகும் என்பதில் ஐயமில்லை என தோழர் இருதயராஜ் எழுதுகிருர்.

# மதிப்புரைகள்.

## காந்தி கண்டனக் கீதம்.

புதுப்பாளையம் தோழர் ஏ. முத்துகிருஷ்ணன் (மனிநீலன்) அவர்களால் ஆக்கப்பட்ட மேற்கண்ட நூல் வரப்பெற்ரேம் இன்றைய நம்நாட்டு நிலைக்கும், வருங்கால உலகத்திற்கும் காந்தீயம் கொடிது-கொடிது என்பது சமதர்மிகளின் முடிந்த துணிபு இந்த நங்கோக்கம் பாமரர்கள் உள்ளத்திலும் பசுமரத்தாணி போல் பதியுமாறு பலவித வர்ணமெட்டுகளுடன் காந்தி கண்டனக் கீதம் அமையப்பெற்றிருப்பது போற்றற்குறியது. விலை அணு 1.

தனிப் பிரதி வேண்டுவோர் ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 25 புஸ்தகம் | ரூ. | 1-4-0 |
| 50 | ,, | ,, 2-8-0 |
| 100 | ,, | ,, 5-0-0 |

கிடைக்குமிடம்:-

காரியதரிசி,
சமதர்ம வாசகசாலை, புதுப்பாளையம்,
போளூர் மார்க்கம்,
N. A. Dist-

## தொழிலாளிகளின் முன்னேற்றத் திட்டம்.

சென்ற ஜனவரி மாதத்தில் சர்வ தேச சங்கத்தின் லேபர் ஆபீசால் பிரசித்திபடுத்தப்பட்டதும், சென்ற வருஷம் பிரஸ்ஸல்சில் சர்வ தேசத் தொழிலாளர் சங்கங்களின் காங்கிரசின் அங்கீகாரம் பெற்றதுமான "தொழிலாளிகளின் முன்னேற்றத் திட்டம்" என்றதின் தமிழ் பிரசாரம் தென் இந்தியாவிலுள்ள இந்திய ஊழியர் சங்கக் கிராம சேமைப்ப நிலைய அமைச்சர் தோழர் கே. ஜி. சிவசாமி அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது நமது பார்வைக்குக் கிடைத்திருக்கிறது. சமதர்மச் சண்டமாருதம் தமிழ்நாட்டில் மிக உத்வேகமாகப் பரவி வரும் இக் காலில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தக்க முறைகளை விளக்கி இந் நூலில் கூறியிருப்பது பெரிதும் குறிப்பிடத்தக்கது. இப்புஸ்தகம் 'ஒன்றுகூடும்சுதந்திரம்' 'சமூக இன்ஷூரன்ஸ்' 'தொழிலாளர் பாதுகாப்பு' தொழில் பாதுகாப்புக்கான சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதும் அவைகளின் மேற்பார்வையும் ஆகிய நான்கு பிரிவுகளை நன்ருக விளக்கிக் காட்டியிருக்கிறது. சாதாரணமாக எல்லோரும் படிக்கத் தகுந்தவாறு எளிய நடையில் எழுதப்பட்ட பெரிய எழுத்துக்களைகொண்டது. இப்புஸ்தகம் விலை அணு1.

கிடைக்குமிடம்:-

காரியதரிசி,
கிராமச் சேமைப்பு நிலயம்,
மாயனூர், திருச்சிஜில்லா

## சேலம் ஜில்லா
## ஹரிஜனக் கமிட்டிக்கூட்டத்தில்
# குழப்பம்.

11-3-34 தேதியன்று சேலம் ஜில்லா ஹரிஜனக் கமிட்டி ஒன்று நியமிக்கவும், ஹரிஜன நிதிக்காக தோழர் காந்தி அவர்களால் வசூலித்த பணத்தைச் செலவிடும் விஷயத்தை ஆலோசிக்கவும் ஒரு பொதுக் கூட்டம் தோழர் ராமச்சந்திர நாயுடு அவர்களின் தலைமையில் சேலம் பிரம்ம ஞான சபையில் (Thesopical Society) சுமார் 6 மணிக்குக் கூடிற்று. முதலில் தோழர் அனந்தாச்சாரி அவர்கள் ஒன்பது பேர்களடங்கிய ஜில்லாக் கமிட்டி ஒன்று அமைக்க ஒரு தீர்மானம் கொண்டுவந்தார் 9-ல் ஒருவராகிய தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் அகில இந்தியத் தோழர்களின் ஒருவராக பாவிக்கப்படுவதாலும் பெரும்பாலும் சேலம் ஜில்லாவின் பொதுக் காரியங்களில் கலந்துகொள்ள இயலாததாலும் அவரைக் கமிட்டியிலிருந்து எடுத்துவிடவேண்டுமென்று தோழர் ஏ. எம். பால்சாமி அவர்கள் ஒரு திருத்தப் பிரேரபணை கொண்டுவந்தார். இருவித அபிப்பிராயபேதம் பலமாக ஏற்படவே தலைவர் ஓட்டெடுக்கவே தோழர் பால்சாமியின் திருத்தத்திற்கு 32 பேர்கள் சாதகமாகவும் 11-பேர்கள் பாதகமாகவும் ஓட்செய்ததால் தோழர் ராஜகோபாலாச்சாரியாரின் பெயரைக் கமிட்டியிலிருந்து எடுக்கப்பட்டது. உடனே சிறிது குழப்பம் கூட்டத்தில் ஏற்பட்டது. கமிட்டியில் பெரும்பாலும் பிராமணர்களாகவும், தீண்டாதவர்களைப்பற்றிக் கவலையற்றவர்களாகவும் இருப்பதால் கமிட்டியில் இரு பெண்களையும், இரு ஆதிதிராவிடர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை தோழர் நடேசன் கொண்டுவந்தார். ஆதிதிராவிடர்கள் அனைவரும் இதை ஆமோதித்தார்கள். அதிகமான ஓட்டுகளால் இத் தீர்மானமும் நிறைவேறியது. இதற்குள் சப்தமும், கிளர்ச்சியும் அதிகரித்தது. ஒரு பார்ப்பனத் தோழர் யாரோ சிலர் வேண்டுமென்று விஷமம் செய்ய வந்திருப்பதாகவும், அவர்களைப் பேச அனுமதிக்கக்கூடாதென்றும் சொன்னபோது இன்னும் அதிகமானசப்தம் ஏற்பட்டது. பிறகு தோழர் பவானிசிங் எழுந்திருந்து தலைவரை இக்கூட்டம் பொதுக் கூட்டமா? சிலருக்குமாத்திரந்தான் பேச உரிமையுண்டா? அல்லது இங்கு வந்திருக்கும் அனைவருக்கும் உரிமையுண்டாவென்று கேட்க பொதுக் கூட்டம் என்று துண்டுப் பிரசுரங்களில் வெளியிட்டிருப்பதால் எல்லோரும் பேசலாமென்று தலைவர் சொன்னர்.

பிறகு சேலம் தாலூகாக் கமிட்டி ஒன்று அமைக்க மற்றொரு தீர்மானம்விவாதிக்கையிலும் தோழர் நடேசன் இதிலும் ஆதிதிராவிடர்களை அதிகமாகச் சேர்க்கவேண்டுமென்று பேசவே மெஜாரிட்டியின்பேரில் 3 ஆதிதிராவிடர்களைக் கமிட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது எல்லா விஷயங்களிலும் தோல்வியடைந்த ஹரிஜனத் தலைவர்கள் எனப்படுவோர் விசனமடைந்தனர். மூன்றுவதாகப் பிரசாரத்திற்கும், ஹரிஜன வேலை நிர்வாகத்திற்கும் மாதம் 40-ரூபாயைச் சென்ட்ரல் கமிட்டியார் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறது என்ற தீர்மானம் நிறைவேறிய பிறகு தோழர் பால்சாமி எழுந்து ஹரிஜனப் பிரசாரத்திற்காக ஒருபைசாக்கூடச் செலவிடக் கூடாதென்றும், அனாவசியமாக வண்டி, மோட்டார், பெட்ரோல் செலவுகள் செய்யக் கூடாதென்றும், ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்காக வசூலித்த பணத்தில் ஒரு பைசாக்கூட சொந்தத்திற்கு உபயோகப்படுத்தக் கூடாதென்றும், அடிமைப்படுத்தப்பட்டு பரிதாப நிலையிலிருக்கும் ஆதிதிராவிடர்களை மோசஞ்செய்வது யோக்கியமாகாதென்றும் பேசி பிரதிமாதமும் கிடைக்கும் பணத்தை ஆதிதிராவிடர்களுக்கே செலவு செய்ய வேண்டுமென்று ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார். ஹரிஜன ஜில்லாக் கமிட்டியின் சங்கத்தினரும், பிரபலக் காங்கிரஸ் வாதியுமான தோழர் வெங்கடாஜல ரெட்டியார் எழுந்து பல அனாவசியச் செலவுகளைக் கமிட்டி செய்ததைத் தானும் ஒத்துக்கொள்வதாகவும் கமிட்டிக் காரியதரிசி தோழர் கந்தசாமி பிள்ளை செய்திருக்கும் செலவிற்கு ஆதாரமே இல்லை என்றும் இனிமேல் எல்லோரும் யோக்கியமாக இருக்கவேண்டுமென்றும் பேசினர். பிறகு தோழர் நடேசன், பால்சாமியின் திருத்தத்தீர்மானத்தை ஆமோதித்துப் பேசினர். தலைவர் திருத்தத்தை ஓட்டுக்கு விடவே, சாதகமாக 37 ஓட்டுகளும், பாதகமாக 13 ஓட்டுகளும் கிடைத்ததால் தோழர் பாலசாமியின் திருத்தம் நிறைவேறியது பின்னர் கூட்டத்திற்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டது. பணவிஷயத்தில் பெரிதும் ஏமாற்றமடைந்ததால் 3-வது அசல் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்தான் தீர்மானத்தை வாபீஸ் வாங்கிக்கொள்வதாகச் சொன்னர். சுயமரியாதைத் தோழர்கள் அனைவரும், தீர்மானமும், அதன் திருத்தமும் நிறைவேறிய பிறகு சகல தீர்மானத்தை வாபீஸ் வாங்கிக்கொள்வது ஒழுங்கல்ல என்றார்கள். ஆனல் தலைவர் தீர்மானம் வாபீஸ் வாங்கிக்கொண்டதையே ஊர்ஜிதப்படுத்தினர். உடனே தோழர் பவானிசிங் எழுந்து இம்மாதிரி செய்வது நியாயம் அல்லவென்று சொல்லியும் தலைவர் கேட்காமல் ஒரே பட்சமாக இருந்துவிட்டார். கூட்டத்தில் குழப்பம் அதிகம் ஏற்படவே காங்கிரஸ் தோழர் ஒருவர் கூட்டத்தை ஒத்திவைத்திட வேண்டுமென்றர். அதற்குள் மற்றொரு காங்கிரஸ் தோழர் நேற்று கருப்புக்கொடி காந்திக்கு பிடித்தவர்களும், ஹரிஜன பிரசாரத்தை பகிஷ்கரித்தவர்களும் இன்று ஹரிஜனவேலையில் கலந்து கொள்வது நியாயமா? என்று பதட்டமாக பேசவும், தோழர். ஈரோடு பாபுசாமி அதற்குபதில் சொல்ல ஆரம்பித்தார். கூட்டத்தில் பெருங்குழப்பம் ஏற்பட்டதால், தலைவர் நிலைமையை தாங்க முடியாததாலும் பிரம்ம ஞான சபைக் காரியதரிசி அங்கே இம்மாதிரி கூச்சல் போடக் கூடாது என்று சொன்னதாகவும் தலைவர் கூட்டத்தைக் கலைத்து விட்டேன் என்று வெளியே சென்றுவிட்டார். ஆதித்திராவிடர்கள் அனைவரும் ஹரிஜனப் பெயரைச் சொல்லிக்கொண்டு சில காங்கிரஸ்காரர்கள் செய்யும் அட்டூழியத்தைக் கண்டித்துப்பேசிக் கொண்டார்கள். பிறகு 8-30 மணிக்கு எல்லோரும் திரும்பினர்.

---

## ரெட்டி வகுப்பில் மறுமண வைபவம்.

முத்துராமலிங்கபுரம் சுயமரியாதைச் சங்க சர்வாதிகாரி தோழர் கா. கா. பெருமாள் அவர்களின் தலைமையின் கீழ் 10-3-34 தேதி சனிக்கிழமை, ரெட்டி வகுப்பைச்சேர்ந்த தோழர் வெங்கிடசாமி அவர்களுக்கும் தோழா ஸ்ரீ ரங்கத்தம்மாள் அவர்களுக்கும் மறுமணம் சிறப்பாக எவ்வித மூட சடங்குகளின்றி நடந்தது.

---


## காந்தி கிட்டு.

திருச்சி சுயமரியாதைச் சங்கத்தார் வெளியிட்டுள்ள "காந்தி கிட்டு" "தொந்தி வைத்தா" "எலிக்கிச்சு" முதலிய சிறு கதைகள் விற்பனைக்குக்கிடைக்கும். ஒன்றுக்கு விலை அணா ஒன்று.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.



## திருச்சியில்
# சமதர்ம ஹோட்டல்.

## 300 பங்குகள்

### 150-பங்குகள் சேர்ந்துவிட்டன.

திருச்சி ஸ்ரீரங்கம் சமதர்மத் தோழர்களின் பெருவிருப்பத்திற்கிணங்க திருச்சி டவுனில் குறைந்த செலவில் உணவு கிடைக்குமாறு நவீன முறையில் ஓர் சமதர்ம உண்டிச்சாலை ஸ்தாபிக்கத் தீவிரமான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதன் நிர்வாகத்திற்குப் பங்கு ஒன்றுக்கு ரூ. 10-0-0 வீதம் இதுவரை 150-பங்குகள் சேர்ந்துவிட்டன. எஞ்சிய 150-பங்குகளில் பெரும்பகுதி வெளியூர் தோழர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பெற்றிருக்கின்றன. ஒருவர் இரண்டு பங்குகளுக்குமேல் எடுத்துக்கொள்ள இயலாது. பங்கு தேவையானவர்கள் தங்கள் விலாசம் தெரிவித்தால் மனுப் பாரம் அனுப்பி வைக்கப்பெறும்.

ஆர்கனைசர்,

ராம சுப்பிரமணியம்,

41-திப்ரான் தொட்டி தெரு, திருச்சினப்பள்ளி.

# நான் கண்டது கனவா? நினவா?

[A. பேராசைப்பித்தன் R.]

அன்று தலே "கிண்" என்றிருந்தபடியால் வெளியில் எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்தேன். "முப்பது கோடி ஜனங்களின் சங்க முழுமைக்கும் பொதுவுடமை, ஒப்பிலாத சமுதாயம் உலகிற்கொரு புதுமை" என்ற இனிய வாழ்க்கையை எய்தப்பெற்று அத்துடன் அயர்ந்துவிடாது உலகிலுள்ள அத்தனைகோடி மக்களும் அரிய பொதுவுடமை வாழ்வில் திளேத்தின் புறுமாறு நமது சுயமரியாதை இயக்கமாம்-மான வாழ் வியக்கம்- தன் மதிப்பியக்கம்- மனிதா பிமான இயக்கம்- சமதர்ம இயக்கம் செய்து உலகின் முன் மாதிரியாய்த் திகழுமென எண்ணி, மன உறம்பெற்றுள்ள ஒரு சில இளைஞர்களில் நானும் ஒருவன். எனவே இதைப்பற்றி பகலெல்லாம் ஓயாத சிந்தனையும், இரவெல்லாம் ஒழியாத கனவுகளும் கண்டுகொண்டிருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லேயல்லவா?

இம் மாதிரியான- கவலேயற்ற- பறவைகள் போன்று உல்லாசமாக வாழும் உலகையேமான சீகமாகக் கண்டுகொண்டிருந்த ஓர் நாள் மாலேப்பொழுதில் தான் கீழ்க்காணும் சம்பவம் நேர்ந்தது.- காபியைச் சூடாகக் குடித்ததும், உடம்பில் வியர்வை துளிக்க அப்படியே அயர்ந்து சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன்.

"அடடா! எங்குபார்த்தாலும் ஒரே ஆர்ப்பட்டம்! ஒரே எழுச்சி! ஒரே குதூகலம்!- சுயமரியாதை இயக்க இளைஞர்களின் இருதயங்களெல்லாம் மகிழ்ச்சிப் பெருக்கால் நிறம்பியிருந்தன. ஆனுல் அதே வீதாச்சாரம் வைதீகர் என் போரின் அடிவயிற்றில மிளகாய் அரைத்துமிருக்கலாம்; அதைப்பற்றி நிச்சயமாய் எனக்கொன்றும் தெரியாது. நமது தோழர்களுக்கு என் அவ்வளவு உற்சாகம் என்பதைச் சொல்லவில்லேயே நான!- வேறொன்றுமில்லே. இத்தனே வருடங்களாக ஏற்படாதிருந்த ஓர் திட்டம் நமது இயக்கத்தின் பிரச்சார வேலேகளேயும், மற்ற அழித்தல் ஆக்கல் வேலேகளேயும் சரிவர நிர்வகிக்கத்தக்க ஓர் சரியான திட்டம் அமைக்கப்பட்டு, அதன்படி வேலே நடந்து வருவதையும், அதனுல் சமதர்மக்கொள்கைகள தமிழ் நாட்டிலுள்ள மூலே முடுக்குகளிலெல்லாம் முழுங்கிக்கொண்டிருப்பதும் தான் சந்தோஷத்தின் காரணம்!

இதற்கு முன்னுலெல்லாம் இயக்கத்தோழர்களே ஓர் பகுதியில் பிரசாரத்திற்காக வரும்படி ஒரு தோழர் திட்டம் செய்து கேட்டுக்கொண்டால் பெரும்பாலும் நம் தோழர்கள் அக்கடமையை நிறைவேற்றுவது கஷ்டமாக விருந்தது. ஆனுல் இந்தத் திட்டமும், மத்தியக்கமிட்டியும் ஏற்பட்ட பிறகோ! அடேயப்பா! சென்னே கடற்கரையில் தோழர் பொன்னம்பலனரின் வெண்கலத் தொண்டை, பிரசார இடியாக முழங்கிக்கொண்டிருக்கிறது. நாகர்கோவிலில் தோழர் ஜீவானந்தத்தின் சிம்ம கர்ச்சனே கிளம்பிக் கொண்டிருக்கிறது; மதுரை ஜில்லாவில், தோழர் அழகர்சாமியின் ஆணித்தரமான பிரசாரம் தடபுடலாய் நடக்கிறது. தோழர் நீலாவதியாரின் உணர்ச்சி மிக்க வார்த்தைகள் திருச்சி ஜில்லாவில் எங்கும் சஞ்சரிக்கின்றன, இன்னும் பல தோழர்கள் பல இடங்களில் பல சமயங்கள்! பல பிரசங்கமாரிகள்! பல பீரங்கி வெடிகள்! இவை மட்டுமா?

இன்று, ஈரோட்டில் பிரசங்கம் செய்த பிரசாரக் கோஷ்டி நாளேக் காலே, திருப்பூர், நாளே மாலே, கோவை, மறுநாள் காலே, பல்லடம், மாலே பொள்ளாச்சி, இரவு உடுமலேப்பேட்டை! என்னவேகம்! என்னஉழைப்பு? இப்படியே தமிழ் நாட்டிலுள்ள அத்தனே ஜில்லாக்களிலும், உள்ள ஜில்லா கமிட்டிகள் இப்படியே வேலே செய்கின்றன வென்றுல் இதைக் காணுகின்ற எழுச்சி மிக்க இளைஞன் துள்ளிக் குதிக்கமாட்டானு? நீங்களே சொல்லுங்கள்.

இவையெல்லாம் எப்படி நடைபெறுகின்றன? ஆ! அதை எண்ணும் போது தான் நமது இயக்கத் தோழர்களின் தன்னலமற்ற தியாக புத்தி.- செயலில் வெளிப்படையாகத் தெரியவருகிறது-என்ன? மத்தியக் கமிட்டி. இத்தப் பெய டன் ஓர் பலமான கமிட்டி ஏற்பட்டு விட்டது. அதே சமயத்தில் ஜில்லா தோறும் ஜில்லா கமிட்டிகளும் நிறுவப்பட்டு விட்டன. பிரசாரம் பலமாய் நடக்கிறது! இத்தனேயும் எப்படி ஏற்பட்டன தெரியுமா? அதில் தானிருக்கிறது விஷேமெல்லாம்! கோவை ஜில்லா கமிட்டியின் காரியலாயம் ஈரோட்டில் நிறுவபபட்டது. தகுந்த உழைப்பும், உணர்ச்சியும் மிக்க தோழர்கள் கமிட்டியின் நிர்வாக அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். ஜில்லா முழுவதும், மாதத்தின் 30 நாட்களிலும் எப்படியாவது 20 ஊர்களில் சராசரி 30 கூட்டங்கள் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. இது எபபடி சாத்தியப்படுகிறது. இந்த ஜில்லா கமிட்டியார் ஓர் பெரிய மோட்டார் லாரியை வாங்கினர்கள். அதில் சாதாரணமாய் 8பேர்கள், சமையல், படுக்கை, ஆபீஸ் வேலேகள் போன்ற எல்லாவற்றையும் அங்கேயே நடத்திக்கொண்டு வெகு சுலபமாக மாதமொன்றுக்கு 1500 மைல்கள் பிரயாணம் செய்துகொண்டுபலமான பிரச்சாரம் செய்ய ஏற்றதாயிருக்கிறது. அதில் பிரயாணம் செய்கிற பிரசாரக் கோஷ்டியாரின் சமையல் சாப்பாடுகள் லாரியிலேயே "குக்க"ரின் உதவியால் நடைபெறுகிறது. ரெயில் வண்டி போகாத பல கிராமங்களுக்கும் இந்த லாரியில் சென்று பிரச்சாரக் கோஷ்டியார் வேலே செய்கிருர்கள். மாதமொன்றுக்கு சராசரி இவர்களின் செலவு (4பேருக்கு) 20 ரூபாய்களுக்கு மேல் ஜில்லா கமிட்டியை பொறுக்கவில்லே. எவ்வளவு நேர்த்தியான புறப்பாடு!

இவ்வளவிற்கும்பணம் எது? கோவைஜில்லா பிரசாரக் கமிட்டித் திட்டம் செய்து நிறுவிய உடனேயே தோழர்களான, ஈ. வெ கிருஷ்ணசாமி ரூ500, டாக்டர் எம். கிருஷ்ணசாமி ரூ500, சு. ரா இராமசாமி, 500, சிக்கையா அவர்கள் ரூ500, டி. டி கோபால் 100 மற்றபடி ஜில்லா முழுவதிலுமுள்ள சுமார் 100தோழர்கள் நபர் ஒன்றுக்கு ரூ 10 மற்றும் 50 தோழர்கள் நபர் ஒன்றுக்கு ரூ 5 பின்னும் பலர் ரூ 1 இப்படியாகத் தாராளமாக கொடுத்து தியாகம் செய்யவே ஒரே மாதத்தில் மொத்தம் ரூ 3500 சேர்ந்துவிட்டது. ஆ! என்னே நம் தோழர்களின் தியாகம்! சுயமரியாதைக்காரர்களிக்கும், தியாக புத்திக்கும் வெகுதூரம் என்று கூறித்திரிந்த வீணரெல்லாம் இதைக்கண்டு வெட்கித்தலே குனிந்தனர்.

இந்த பணத்தைக்கொண்டு லாரியும், மற்ற உபகரணங்களும் வாங்கப்பட்டன. நான்கு பிரசாரகர்கள் லாரியில் புறப்பட்டு விட்டார்கள். இதைத்தெரிந்த உடனே, தஞ்சை ஜில்லா தோழர்கள் சும்மா இருப்பார்களா? அவர்கள் ஆரம்பித்தார்கள். தஞ்சை ஜில்லாவின் கமிட்டி மாயவரத்தில் அமைக்கப்பட்டு தோழர் சி நடராஜன் அவர்கள் தலேவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். கமிட்டியின் நிதிக்காக அவர் ரூ500 அளித்தவுடனே தஞ்சை, நாகபட்டினம், மன்னுர்குடி முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை திருவாரூர் கும்பகோணம் முதலிய ஊர்களிலிருந்து இப்படியே 100 50 மாக ரூ 3000 சேர்ந்து, அங்கு மோட்டார் முதலியவை வாங்கப்பட்டு 4 பிரசாரகர்கள் கிளம்பினர்கள்.

அடுத்த படியாக வட ஆற்காடு, திருச்சி, திருநெல்வேலி, செங்கல்பட்டு முதலிய ஜில்லாக்களிலெல்லாம் இதே போன்று கமிட்டிகள் ஏற்படலாயின. இவ்வாறு வெகு துரிதமாகவும், விரிவாகவும் வேலே நடப்பதற்கு இடங்கொடுத்தது பணம் தான். சக்தியுள்ள தோழர்கள் வாயால் சமதர்மம் பேசிக்கொண்டிராமலும், அடுத்தவன் கொடுக்கும் அளவு நாம் கொடுப்போமே நாம் ஏன் அதிகம் கொடுக்க வேண்டும் என்ற குறுகிய எண்ண மில்லாமலும், தங்களிடம் பணமிருக்குமானுல் அது ஒரு காலத்தில் பல ஏழைகளேக் கசக்கிப் பிழிந்து ஏமாற்றி கொள்ளேயடித்த தன் மூலம் சேர்ந்த பணம் என்பதை நன்கு மனதிலிருத்தி தாராளமாகக் கமிட்டிக்குப் பணம் கொடுக்க முன்வந்த தியாக புத்தியின் தன்மையால் தான் இவ்வளவு பெரிய பரபரப்பான ஏற்பாடுகள் செய்ய முடிந்தன.

இந்த ஏற்பாடுகள் நடைபெற்ற 6மாதத்திற்குள் அடடா! தமிழ் நாட்டில் என்ன மாறுதல்கள்! என்ன முன்னேற்றம்! அதிகஞ் சொல்வானேன்! மூலே முடுக்கு எங்கணும் பிரசாரம் பிரசாரம்!! சமதர்ம முழக்கம் முழக்கம் வீரர்களின் கர்ஜ்ஜனே! கர்ஜனே!!

இந்த மகத்தான மாறுதலேக்கண்ட எல்லோரும் வியப்படைந்தார்கள். பொதுஜனங்களும் விழிப்பெய்தினர் நிர்வாகக்கமிட்டியாரும் ஊக்கங்கொண்டனர். மாகாண மத்தியக் கமிட்டியார் இன்னும் விரிவான மூன்று வருடத்திட்ட என்று ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். அவ்வளவுதான் தாமதம் தோழர்கள், ஈ. வெ. கிருஷ்ணசாமி 1000, ராமசாமி, 1000 நடராஜன் 1000, சுப்பையா 1000 பார்த்தசாரதி 1000, தர்மலிங்கம், வல்லத்தரசு அருணுசலம், ஆறுமுகம், சிதம்பரம், பாண்டியன் முதலிய தோழர்கள் ஒவ்வொருவரும் நூறு நூருகவும், பத்து பத்தாகவும், பணமனுப்பினர். அப்பொழுது தான் சுயமரியாதை இயக்கத்தின் ஜீவிய ஒளி உண்மையில் உலகில் தோன்றலாயிற்று. ஒரேமாதத்தில் பல ஆயிரம் ரூபாய்கள் குவிந்து விட்டன. பிரசாரக் கமிட்டியில் அதிக அங்கத்தினர் சேர்க்கப்பட்டனர். மேஜிக் லேண்டர்ன்களும், சினிமாப்படங்களும், நாடகங்களும் ஒலிபெருக்கிகளும ரேடியோக்களும் சமதர்மப் பிரசாரத்தில் உபயோகிக்கப்பட்டன. ஒரே வருடத்தில் ஆயிரக்கணக்கான சங்கங்கள் தோன்றலாயின. லக்ஷக்கணக்கான அங்கத்தினர்கள், லக்ஷக்கணக்கான பண வருவல், நூற்றுக்கணக்கான பிரசாரர்கள், அடுத்த வருடத்தில் சுயமரியாதை சமதர்மக் கக்ஷியின் பேரால் சென்னே சட்டசபையில் தோழர் சிங்காரவேலுவின் தலேமையில் பலத்த கக்ஷி யொன்று, சரமாரியான கேள்விகள, பதில்கள்!! நூற்றுக்கணக்கான பத்திரிக்கைகள்."

இந்த ஆனந்தமான சமதர்ம மானசீக உலகில அடியேன் சஞ்சரிதுக்கொண்டிருக்கும்போது "கோவை ஜில்லா கமிட்டிக்கு முதலாவதாக 200 ரூபாய்கள் நிதி சேகரிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. யார் யார் பணம் கொடுக்கி

## இராமனுதபுரம் ஆதிதிராவிடர்—நாட்டார், தகராறு.

### சமாதான—வரலாறு.

—:O:—

இராமநாதபுரம் ஜில்லா காளையார் கோவில் போலீஸ் சரகம் ஒட்ட நத்தம் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர்கள், நாட்டார்கள் ஏற்படுத்திய கட்டளைக்குவிரோதமாக செம்பு, பித்தளைப் பாத்திரம் உபயோகப்படுத்தியதின் காரணமாய் ஷை ஒட்டநத்தம கிராமத்தைச் சேர்ந்த அருளாந்து உடையார் வகையறுவைச் சேர்ந்தவர் நாட்டார் தலைவர்களின் தூண்டுதலில் 1933-ஞு செப்டம்பர் மீ 7உ காலையில் தண்ணீர் எடுத்து வர செப்புக்குடம் கொண்டுபோன ஆதிதிராவிட பெண்ணிடமிருந்த ஷை பாத்திரத்தை பலாத்காரமாய் பறித்துக்கொண்டு போய்விட்டதாகவும் அது விஷயமாய் ஆதிதிராவிடர் ஷை சங்கிலி வகையறு ஒட்டநத்தம் கிராமச் சொந்தக்காரர்களுக்கு தெரிவித்து ஷையார் உத்திரவின் பேரில் காளையார் கோவில் போலீசுக்கும், டிப்டி சூப்ரண்டுக்கும் மனுச்செய்ததாகவும் யாதொரு நடபடிக்கையும் நடைபெருததால் ஜில்லா கலெக்டர் துரை அவர்கள் திருவாடானை முகாமுக்கு வந்த சமயம் ஒரு மனு கொடுத்திருந்ததாகவும் தெரிய வருகிறது. இந்த மனுவை கலெக்டர் துரை அவர்கள் சிவகெங்கை கனம் சப் மேஜிஸ்திரேட்டு அவர்களுக்கு விஜாரணைக்கு அனுப்பி அதன் பேரில் 1934ஞு பிப்ரவரி மீ 18உ காளையார் கோவில் முகாமில் ஷை மனு விசாரிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

அது சமயம் இராமனுபுரம் ஜில்லா ஆதிதிராவிடர் மஹாஜன சங்கப் பிரசிடெண்டு கனம் ஏ. எஸ். ஜான் அவர்கள் ஷை சப் மேஜிஸ்டிரேட்டு அவர்களின் உதவியால் நாட்டார்களையும் ஆதித்திராவிடர்களையும் கலந்து அதன் பேரில் இருதிரத்தாருக்கும் பரஸ்பர சினேகம் ஏற்படத்தக்க முறையில் சமாதானம் செய்யத்தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. அது விஷயமாய் முடிவான சமாதானத்திற்காக 25-2-34உயில் சிவகெங்கையில் வாய்தா போடப்பட்டிருந்தது. அன்று தினத்தில் நாட்டார்களுக்காக கனம் வக்கீல் விட்சர்ச்சு அவர்களும், ஆதிதிராவிடர்களுக்காக கனம் வக்கீல் எல். கிருஷ்ணசாமி பிள்ளை அவர்களும் ஆஜராகியிருந்ததாகவும் தெரிகிறது. அதுசமயம் கனம் ஏ. எஸ். ஜகன் அவர்களின் விடாமுயர்ச்சியால் நீண்டநேரம் சம்பாஷணையிலிருந்த நாட்டார்களின் முந்திய தீர்மான நிபந்தனைகளின் சாதனையாகிய செப்புக்குடத்தை திருப்பி வெளியரங்கமாகக்கொடுப்பதை தவிர்த்து மற்றவைகளை ஏற்றுக்கொண்ட நிலைமையையும், ஆதிதிராவிடர்கள் பிடிவாதமாய் செப்புக்குடத்தை தராவிட்டால் சமாதானத்திற்கு உடன்படமாட்டோம் என்ற நிலைமையையும் ஒருங்கே கவனிக்கப்பட்டு இறுதியில் விவகாரம் இவ்வாறு ஓர் முடிவுகட்டி இருதிறத்தாரும் சமாதானத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

பின் வரும் நிபந்தனைகளின் பேரில் முடிவில் சமாதான முச்சலிக்கை எழுதி இருதிறத்தாராரும் கையொப்பமிட்டு கனம் சப்மேஜிஸ்டிரேட்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

### சமாதான முச்சலிக்கை உடன்படிக்கை.

1. மனுதார் வகையரா ஜாதியார் தங்கள், சட்டை, பனியன் கோட்டு முதலிய ஆடைகள் உடுப்பதை பற்றி கவுண்டர் மனுதார்களுக்கு எவ்வித ஆக்ஷேபனையுமில்லை, இனி ஆக்ஷேபிக்கிறதுமில்லை.

2. மனுதார் வகையரா ஜாதியார் செப்பு பித்தளை சாமான்கள் உபயோகிப்பது பற்றி கவுண்டர் மனுதார்கள் ஆக்ஷேபிக்கவில்லை, இனி ஆக்ஷேபிக்கிறது மில்லை.

3. ஆறு, கிணறு, குளங்களில் மற்றவர்களைப்போல் மனுதார் ஜாதியார் தண்ணீர் எடுப்பதையும், கவுண்டர் மனுதர்கள் ஆக்ஷேபிக்கவும் இல்லை இனி ஆக்ஷேபிக்கிறதுமில்லை.

4. பொதுப்பாதைகளை மற்றவர்களைப்போல் மனுதார் ஜாதியார் வகையரா உபயோகிப்பதைக்கவுண்டர் மனுதார்கள் ஆக்ஷேபிக்கிறதுமில்லை, இனி ஆக்ஷேபிக்கக்கூடியதுமில்லை.

5. ஒட்டநத்தம், மருதக்கண்மாய், மூத்தான் கண்மாய் இந்த 3கிராமங்களிலும் மனுதார்களுக்குபதிலாக கவுண்டர் மனுதார்களால் நியமிக்கப்பட்டிருக்கும் தோட்டிகளிடம் மனுதார்கள் கலகம் செய்வதும் இல்லை தடை செய்வதும் இல்லை எப்போதும் தடுப்பதும் இல்லை.

கையொப்பம்.

மனுதார்கள். (ஆதிதிராவிடர்கள்) அ. சங்கிலி. முதலிய நால்வர்.

கவுண்டர் மனுதார்கள் (நாட்டார்) ப. மு முத்தய்யா உடையார் முதலிய 11-பேர்

——

### ரஷியா.

புதுப்பாளையம், சுயமரியாதைத் தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்கள் வாழ்க்கைத்துணைவியார் இரத்தினம்பாள் 21-2-34 புதன்கிழமை காலை 10-30 மணிக்கு ஓர் பெண் மகவை ஈன்றனர். அக்குழந்தைக்கு 'ரஷியா' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. தாயும் குழந்தையும் சௌகரியமாக இருக்கின்ருர்கள்.

### சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

ஷை மன்றத்தின் கூட்டம் ஒன்று 11-3-34 ஞாயிற்றுக்கிழமை பகல் 2-மணிக்கு 221 தங்கசாலை வீதியில் தோழர் எஸ். ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் எஸ். பிரகாசம், ஜே. ராதாகிருஷ்ணன், எம். எஸ். முத்து, கே. எஸ். நாதன், சி. ஆர். தீனதயாளு முதலியோர் "விஞ்ஞானமும், மூடநம்பிக்கையும்" என்பது பற்றிப்பேசினார்கள்.


## "சன்மார்க்கன்"

சீர்திருத்த தமிழ் மாதப்பத்திரிகை.

சாதி, சமயம் முதலிய மூடக் கட்டுப்பாடான குருட்டு நம்பிக்கைகளைக் கண்டித்து, பகுத்தறிவுக்கொள்கைக்கேற்றவாறு சன்மார்க்கத் துறையில் புகட்டுவது.

ஆசிரியர்:—

சுவாமி சிவநேசம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. 1-0-0 | ரூ. 1-8-0 |
| தனிப்பிரதி...... | 0-2-0 | 0-3-0 |

மானேஜர் "சன்மார்க்கன்"
திண்டுக்கல் S. I.




## "பானியால் டூத் பேஸ்ட்"

பல்லுக்கு உறுதியளிக்கவல்லதென பல நூற்றாண்டுகளாக ஆன்றோர்களால் போற்றப்படும் ஆலம் விழுதின் சத்தினுல் தயார்செய்யப்படுவது, வாயை சுத்தம் செய்து, ஈறுகளைக் கெட்டிப்படுத்தி, பற்களுக்கு உறுதியளித்து, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்கிறது.

### ஏஜண்டுகள் தேவை.

பானியால் கம்பெனி "லெனின் அவுஸ்,"
தியாகருய நகர், சென்னை


## ஈரோடு முனிஸிபாலிடி

### டெண்டர் நோட்டீஸ்.

5360-அடி நீளம் குழாய் போடுவதற்குத் தேவையான பைப்லைன் சாமான்கள் சப்ளைசெய்வதற்கு 20-3-34 தேதி 4-மணி வரையில் அடியில் கையொப்பமிட்டவருல் சீல்வைத்த டெண்டர்கள் வாங்கப்படும். எஸ்டிமேட் தொகை ரூ. 12,000. முழுவிபரங்களுக்குஅடியில் கையொப்பமிட்டவருக்கு எழுதவும்.

கே. ஏ. ஷேக்தாவூத்,
சேர்மன்.

---

ளுர்களோ தெரியவில்லை." என்று தோழர் ஜீவானந்தம் அவர்கள் கூறியவுடன் எனது மெய்யுணர்வு எனக்குவர அதன் பின்னர் ஈரோட்டில் நடைபெற்ற கோவை ஜில்லா கமிட்டி அமைப்பின் விபரங்களைத் தோழரால் அறியலானேன்.

அதன் பின்னர்தான் நான் மேலே இந்த குறிகளுக்குள் கூறிய அனைத்தும் அதாவது நான் கண்ட கனைத்தும் வெறும் உறுவெளித் தோற்றமென்றும் எனது பேராசைப் பித்தம் என்றும் அறியலானேன். ஆனுல் உண்மையில் இதுபோல் நான் பலமுறை கனவுகண்டதுமுண்டு, நனவில் எண்ணமிட்டது முண்டு, தோழர்களுடன் கலந்து பேசியதுமுண்டு- ஆனுல்.........

ஆனுல் 200 ரூபாய் சேர்த்து பிரசாரம் செய்ய பொறுப்பு வாய்ந்த ஓர் ஜில்லா கமிட்டி முடிவு செய்ததையறிந்தவுடன், இத்தகைய சிறிய திட்டத்தைத்தானு தமிழ்நாட்டு எழுச்சி மிக்க இளைஞர்கள் எதிர்பார்த்தார்கள் என்ற ஐயப்பாடு கிளம்புகிறது. "நான் கண்ட கனுத்தோற்றத்தில் உண்மையில் நடக்க முடியாத அம்சங்கள் இம்மிகூட இல்லை" என்று என் மனம் இன்னமும் நம்புகிறது. இது கடைசிவரையில் கனவாக முடியுமா? நனவாக முடியுமா?

# மகாநாட்டைக் கலைக்க போலீஸார் முயற்சி.

## எதிரிகளின் சூழ்ச்சி பலிக்கவில்லை.

## பெருந்திரளான பிரதிநிதிகள் விஜயம்.

### மாஜிஸ்டிரேட் 144 தடை உத்திரவு பிறப்பிக்க மகாநாட்டுக்கு விஜயமானர்.

### இறுதிவரை மகாநாட்டின் நடவடிக்கைகளைக் கவனித்துத் திரும்பினர்.

### மகாநாட்டுத் தலைவரின் விரமுழக்கம்.

### தோழர்களின் பொதுவுடைமைப் பிரசாரம்.

(நமது நிருபர்)

இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு திருப்பத்தூர் சுகானந்த விலாஸ் தியேட்டரில் 11-3-34 தேதியன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 9 மணிக்கு ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்கத்தலைவர் டாக்டர் தோழர் கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று.

மகாநாட்டுக் கொட்டகை முழுதும் பல நீதிவாக்கியப் படங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மகாநாட்டுக்குப் பெருந்திரளான பிரதிநிதிகள் மதுரை, திருச்சி, உறையூர், நாகை, ஈரோடு, சிவகெங்கை, தேவகோட்டை, காரைக்குடி, கோட்டையூர், சிராவயல், நாச்சியார்புரம், புதுக்கோட்டை, ராயவரம், ஆலங்குடி, கூத்தலூர், மேலூர், திருக்கோஷ்டியூர், சண்முகநாதபுரம், வலம்புரி, பட்டமங்கலம், கண்டரமாணிக்கம், கூழி பிறை, கல்லல், பதக்கப்பட்டி, ஒச்சூர், குன்றக்குடி, கீழச்சிவற்பட்டி, முதலிய பல யிடங்களிலுமிருந்து வந்திருந்தார்கள். மற்றும் உள்ளூர், தெம்மாப்பட்டு, தம்பிப்பட்டி, சிங்கம்புணரி, ஆகிய ஊர்களிலிருந்தும், பல தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

மகாநாட்டுக்கு விஜயஞ் செய்திருந்த தோழர்களில் முக்கியமான தோழர்கள் விபரம் வருமாறு:- டாக்டர் எம். கிருஷ்ணசாமி, எஸ். குருசாமி பி. ஏ., எஸ். குஞ்சிதம் பி. ஏ., எல். டி, என். பி. காளியப்பன், ச.ம.சி. பரமசிவம், ஏ. எஸ். அருணாசலம், மணிமாறன், எஸ். சையத் அகமத், எஸ். லேட்சுமிரதன் பாரதி எம். ஏ. பி. எல்., ஈப்பன் எம். ஏ. பி எல்., எம். பொன்னுசாமி (வக்கீல்), பொ. ராமநாதன், வெள்ளைச்சாமி, கே. மாதவன், சி ஏ. அனந்தராம், வே. நடராஜன், சுப்பிரமணியன், சிவசுப்பிரமணியம், ராஜகோபால், கே. எம். அழகப்பா, நாமநாதன், கும்பலிங்கம், கண்ணப்பர், சி. முருகன், டேவிஸ் பி. ஏ., அ. முத்தையா, நா. பள்ளிகொண்டான், மு. கணபதி, செல்லம், சண்முகம், செல்லையா, மரு. வீர. கோவிந்தசாமி, நாராயணன், லெட்சுமணன், சின்னையா, அண்ணாமலை நடராஜன் வ. வெ. கருப்பையா, (அமராவதிப்புதூர்) பரமசிவம், என். எஸ். கணபதி, கிருஷ்ணசாமி, ஆண்டியப்பா, ரெங்கநாதன் சொக்கலிங்கம், மெய்யப்பன், ஆறுமுகம், டாக்டர் ஜோஸப் பீட்டர், ஆரோக்கியம், விக்டர் தமாஸ், டாக்டர் தானியல், ஜனுப் சேயி. பக்கிரி

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

வரவேற்புக் கழகத்தாரின் சார்பாக கேட்டுக்கொள்வதோடு, எங்கள் அழைப்பிற்கிணங்கி இங்கு வந்திருக்கும் பிரதிநிதிகளாகிய உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

முகமது ராவுத்தர், நா. சோமசுந்தரம், வயிமு ஷண்முகம், அ. பொன்னம்பலம், ராம சுப்பையா, சமதர்ம செந்தமிழ் கலாசாலை மாணவ மாணவிகள் முதலியவர்களாவார்கள்.

மகாநாட்டுக்கு எதிர் பிரசாரம் செய்து மகாநாட்டைக் கூட்ட விடாமல் கலவரம் செய்யவும், எதிர்க்கூட்டம் கூட்டி பிரசாரம் செய்ததும் போலீஸாரிடம் மகாநாடு நடக்காமல் தடை யுத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக் கொண்டவர்களும் சுயமரியாதைக் காரர்கள் மீது அவதூறு எழுதி சுவற்றில் விளம்பரம் ஒட்டியவர்களும், வாய்க்கு வந்தபடி வசைபுராணங்கூறி ஆத்திரத்துடன் அலைந்து திரிந்தவர்களுமாகிய சில தோழர்களில் மிக முக்கியமானவர்களுமான தோழர்கள் கே. கிட்டுவைய்யர், சுப்பிரமணியஞ் சேர்வை, நமோ நாராயணன் சேர்வை, பெரியசாமி பிள்ளை ஆகிய குறிப்பிடத்தக்கவர்களும் மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்து இடையிடையே கூச்சலும், குழப்பமும், செய்துகொண்டும் வசைபுராணம் பாடிக்கொண்டுமிருந்தவர்களாவார்கள். இவர்களது வேண்டுகோளின் படியே சப்இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், தடிதாங்கிய போலீஸ் சேவகர்கள் பலரும் விஜயம் செய்திருந்தார்கள்.

மகாநாடு ஆரம்பித்ததும் மாணவ மாணவிகள் சமதர்ம கீதங்கள் பாடினார்கள்.

மகாநாட்டின் வரவேற்புக்கழகத் தலைவர் திருப்பத்தூர் தோழர் நா. பள்ளிகொண்டான் அவர்கள் தனது பிரசங்கத்தைப் படித்தார். (அதன் விபரம் மற்றொரு இடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.)

மகாநாட்டுத்தலைவரை தோழர்கள் நா. பள்ளிகொண்டான், எஸ். குருசாமி முதலியவர்கள் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்ட பிறகு தலைவர் தமது முன்னுரைப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். அதன்பிறகு மதுரை தோழர் எஸ். சையத் அகமத் அவர்கள் "சுயமரியாதை இயக்கம்" என்பது பற்றி பிரசங்கம் செய்தார். அது சமயம், தோழர் சுல்தான் பக்தாதி "இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி ஒன்றும் பேசவேண்டாமென்றும், அது பற்றி தங்கட்கு ஒன்றும் தெரியாது என்றும் குறிப்பிட்டார்" பிரசங்கியார் "தனக்கு இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி நன்குத் தெரியுமென்றும், தனக்குத்தெரிந்ததையும் இஸ்லாம் மார்க்கத்தின் பெயராலுள்ள மூடநம்பிக்கைகளையும், அதனால் மக்கள் படும் கஷ்டங்களையும் எடுத்துப்பேச தனக்கு பூரண சுதந்திரம் உண்டு என்றும் பதில் சொன்னார்." இதனிடையில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் நடுவில் தோன்றி மகாநாட்டில் கலகம் வரும்போல் தோன்றுகின்றது. அதனால் தான் கலைத்துவிடப் போவதாகச் சொன்னார். அவருக்கு தக்கசமாதானங் கூறியபிறகு தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் "பொதுவுடமையும், கடவுளும்" என்பதுபற்றிவிளக்கமாகவும், விரிவாகவும் பேசினார். இதனிடையிலும் சில தோழர்கள் நடுவில் குழப்பம் செய்தார்கள். அது சமயம் அங்கிருந்த சப்இன்ஸ்பெக்டரும் சர்க்கிள் இனஸ்பெக்டரும், போலீஸ் சேவகரும் குழப்பக்காரர்களையும், கலக்காரர்களையும் அமைதிப்படுத்திவிட்டு மகாநாட்டைக் கலைத்துவிடப் போவதாகச் சொன்னார்கள். இதனிடையில் சப் இன்ஸ்பெக்டரைப்பார்த்து தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் சொன்னதாவது:- "இம்மகாநாட்டைக்கூட்டி முறையாக எங்களது கொள்கைகளையும், கடமைகளையும் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கும் நாங்கள் இங்கு கலகம் செய்கின்றோமா? அல்லது எங்கள் நோக்கத்திற்குப் புறம்பானவர்கள் வேண்டுமென்றே கலகம் செய்யவும் மகாநாட்டைக் கலைத்து விடவும் வேண்டுமென்ற நோக்கத்துடன் வந்திருக்கும் குறிப்பிட்ட நான்கு நபர்கள் இங்கு அடிக்கடி குழப்பம் செய்கின்றார்களா? இதை நன்றாகக் கவனித்து எப்படி வேணடுமானாலும் செய்யுங்கள்! நாங்கள் கலகம் செய்ய மகாநாடு கூட்டவில்லை" என்றார். இதற்கிடையில் தோழர் சுல்தான் பக்தாதி அவர்கள் மேடைக்கு வந்து தனக்கும் பேச அனுமதி தர வேண்டுமென்று கேட்டார். தலைவர் அனுமதி கொடுக்க பேசியதாவது:-

இன்று இங்கு கூடிப்பேசும்சமத்துவமும் பொதுவுடமையும், ஏழைகட்கு உதவுதல் போன்றதத்துவங்கள் எல்லாம் எங்கள் இஸ்லாம்மார்க்கத்தில்தானிருக்கின்றது என்றும், இது இன்று புதிதல்ல என்றும்பல ஆண்டுகட்கு முன்னேர நபிகள்நாயகம் அவர்களால் கூறப்பட்டிருக்கின்றது என்றும் கொடுமைகள், புரட்டுகள், மூடநம்பிக்கைகள் இவைகளை ஒழிப்பதற்காக கடவுளையும், மதத்தையும் ஒழிக்க விரும்புவது ஞாயமல்ல என்றும் பேசினார். இத்துடன் பகல் 12-30 மணியாகிவிட்டது என்றும் எல்லோரும் சாப்பாட்டிற்காகச் சென்று மீண்டும் மத்தியானம் 2-மணிக்கு வந்து கூடுமாறும் தலைவர் கேட்டுக் கொண்டு மகாநாட்டை முடிப்பதாகச் சொன்னார்.

#### மாஜிஸ்ட்ரேட் விஜயம்.

மகாநாடு முடிந்து யாவரும் சாப்பாட்டிற்குச் சென்றதும் சிலர் தியேட்டருக்குள் நின்று கொண்டிருந்தார்கள். அது சமயம் போலீஸார் யாவரையும் வெளியே போகும்படி சொல்லிக்கொண்டிருந்தார்சள். சப் இன்ஸ்பெக்டரும் சர்க்கள் இன்ஸ்பெக்டரும் தியேட்டருக்குள் மாட்டியிருந்த நீதிவாக்கிய போர்டுகளைப்படித்துப்பார்த்துக் கொண்டு வந்தார். அவற்றுள் "சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டடி" என்ற போர்டைக் கையிலெடுத்துக் கொண்டு இவ்விதம் பலாத்காரத்தைப் புகட்டு முறையில் தயார் செய்து மாட்டலாமா? என்று கேட்டுக் கொண்டிருந்தார். இச்சமயத்தில் திருப்பத்தூர் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் விஜயமாகி இத்துடன் மகாநாட்டை முடிக்கவே தான் வந்ததாகவும், இனி மகாநாடு கூடக் கூடாது என்றும், கூடுவதால் கலகம் வருமென்றுதான் நம்புவதாகவும் மீறி கூடினால் 144 தடையுத்திரவு பிறப்பிப்பதாகவும் சொல்லிக் கொண்டிருந்தார். இதே சமயத்தில் மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த தோழர்களான எஸ். லெட்சுமிரதன்,

பாரதி எம். ஏ. பி. எல், ஈப்பன் பி. ஏ. பி. எல், எம். பொன்னு சாமி ஆகிய வக்கீல்மார்கள் மாஜிஸ்ட்ரேட்டு அவர்களுடனும், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்களுடனும், மகாநாட்டை கூடாமல் தடுப்பது சரியல்ல வென்றும் 1000-ம் பேர்கட்கு மேல் கூடிய மகாநாட்டில் நான்கு பேர்களுடைய குழம்பத்தை அடக்கி விடமுடியாமல் மகாநாட்டையே நிறுத்துவது நீதியல்லவென்றும், தாங்கள் மகாநாட்டைக் கூடாமல் தடுத்துவிடுவதென்று சொன்னால் தாங்கள் எழுத்து மூலம் உத்திரவு பிறப்பியுங்கள் என்றும் நீண்டநேரம் விவாதித்தார்கள். முடிவில் யாவரும் சாப்பாட்டுக்காகக் கலைந்தார்கள்.

### பிற்பகல் நிகழ்ச்சி.

மகாநாடு மீண்டும் 2-30 மணிக்கு ஆரம்பமாயிற்று. காலையில் வந்திருந்தவர்களைவிட பெருந்திரளான மக்கள் வந்துகூடிவிட்டார்கள். போலீஸ் சப்இன்ஸ்பெக்டரும், சர்க்கிள்இன்ஸ்பெக்டரும் மாஜிஸ்திரேட்டும்குறித்த காலத்தில் வந்து விஜயமானார்கள்.

### மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்.

1. ஈரோட்டில் சென்றஆண்டில் சுயமரியாதை இயக்கத்தோழர்களால் முடிவு செய்யப்பட்ட 'சமதர்ம வேலைத்திட்டத்தையும்' சுயமரியாதை இயக்க லட்சியத்தையும்' இம்மகாநாடு பூரணமாக ஆதரிப்பதுடன், மாகாண மகாநாட்டுக்கும் சிபார்சு செய்கிறது. தலைவரால் பிரரேபிக்கப்பட்டுஏகமனதாய்நிறைவேறியது.

2. (அ) தீண்டப்படாதார், தாழ்த்தப்பட்டவர், ஒடுக்கப்பட்டவர், என்று கருதப்படும் மக்களை உயர்ஜாதிக்காரகள் என்போர்களும், சிறப்பாக நாட்டார் வகுப்பைச் சேர்ந்தவர்களென்போர்களும் இனி கொடுமைப்படுத்தாமலும், இழிவு படுத்தாமலும் சமத்துவமாக நடத்த வேணுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

(ஆ) தீண்டப்படாதார் என்று கருதப்படும் மக்கள் தங்கள் கைப்பொருளைக்கொண்டு பெண்களும், ஆண்களும் நல்லசேலை,வேஷ்டி கட்டிக்கொள்வதையும், செப்புக்குடத்தில் தண்ணீர் தூக்குவதையும், கல்வி, சுத்தம், நாகரீகம், பெற முயல்வதையும் கண்டு சகியாமல் ஜாதி வெறிகொண்டு கள்ளர்,நாட்டார் வகுப்பார் என்போர்கள் அடிக்கடி செய்துவரும் கொடுமைகளையும்,கொடூரசெய்கைகளையும், கலவரங்களையும் இம்மகாநாடு வன்மையாக கண்டிப்பதுடன் இத்தகைய கஷ்ட நஷ்டங்களால் துன்பப்படும் மக்கட்கு அரசாங்கத்தார் தக்க பாதுகாப்பளித்து ஆதரவு புரியாமல் அலட்சியமாயிருந்து வருவதைப்பார்த்து வருந்துவதுடன் இனியேனும் அவர்கட்குதக்க உதவி புரியுமாறு கேட்டுக் கொள்கிறது.

பிரரேபித்தவர்:- தோழர் எஸ். லக்ஷிரதன்பாரதி எம். ஏ., பி. எல்.

ஆமோதித்தவர்:- தோழர் எம். பொன்னுசாமி வக்கீல்.

ஆதரி:-தோழர் ஈப்பன் பி.ஏ. பி.எல்.

3. ஒவ்வொரு ஊரிலும் சுயமரியாதைச்சங்கங்கள் ஏற்படுத்தி சமதர்மக் கொள்கைகள் பரவச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரரேபித்தவர்:—

திருமங்கலம் தோழர் மணிமாறன்

ஆமோதித்தவர்:—

சென்னை தோழர் குஞ்சிதம் பி. ஏ. எல். டி.,

4. சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பரப்பும் 'புரட்சி' 'தமிழன்' 'பிரசண்ட மாருதம்' முதலிய பத்திரிகைகளை யாவரும் ஆதரிக்க வேண்டுமாறு நமது தோழர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்கின்றது.

பிரரேபித்தவர்:—

நாகை தோழர் என். பி. காளியப்பன்

ஆமோதித்தவர்கள்:—

மதுரைதோழர் ஏ. எஸ். அருணாசலம், தோழர் டேவிஸ் பி. ஏ.

மகாநாட்டுத் தீர்மானங்கள் யாவும் தோழர்களால் மிகவும் விளக்கமாகவும், விரிவாகவும் பேசப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அதன் பிறகு சென்னை தோழர். எஸ். குருசாமி அவர்கள "நமது கடமை" என்பது பற்றி மிகவிளக்கமாகவும், விரிவாகவும், ருசிகரமாகவும் சுமார் 1-மணி நேரம் வரை அழகாகப் பேசினார்.

பின்மகாநாட்டுத் தலைவர் தனது முடிவுரைப்பிரசங்கத்தை நிகழ்த்தினார். அது சமயம் மகாநாட்டில் சிறிது குழப்பத்தையும், கூச்சலையும் விளைவித்து எதிர்க்கும் நோக்கத்துடன் முன்வந்தவர்களையும் பாராட்டிப் பேசினார். மகாநாட்டைக் கலைத்துவிடுவதாகவும், பொதுவுடமைப் பிரசாரத்தை கேட்காதீர்கள் என்றும், கடவுள், மதம், இல்லை என்கின்றார்கள் என்றும், வெளியில் செய்யப்பட்ட கிளர்ச்சியினால்தான் இம்மகாநாடு, இவ்வளவு சிறப்பாகவும், பரபரப்பாகவும் அதிக உணர்ச்சியுடையதாகவும், உயிருள்ளதாகவும நடைபெற முடிந்தது என்றும் ஒரு கொள்கைக்கு எதிர்ப்புள்ள யிடத்தில்தான் பொது மக்கள் அதைப்பற்றி நன்கு ஆலோசிக்க அவசியமேற்படுகின்றதென்றும் குறிப்பிட்டு விட்டு இம்மகாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளாகிய நீங்களெல்லாம. பொதுவுடமை தத்துவத்தை நாடு முழுதும் பரப்புங்கள. ஆங்காங்கு சமதர்ம சங்கஙகள் சயமரியாதைச் சங்கங்கள் நிறுவுங்கள். நமது லட்சியத்தைப் பின்பற்றும் கோடிக்கணக்கான வாலிப வீரர்களையும், சக்திமிகுந்த தொழிலாளர்களையும்,பாடுபடும் உழைப்பாளிகளையும், கஷ்டப்படும் விவசாயக் குடிகளையும், மாணவர்களையும, பெண்களையும், அங்கத்தினர்களாகச் சேருஙகள். நமது இயக்கப் பத்திரிகைகளை யாவரும் படிக்குமாறு செய்யுங்கள்.

இனி உலகில் கஷ்டப்படும் மக்களுக்குப்பூரண விடுதலையளிக்கத்தக்கது பொதுவுடமை ஒன்றே. ஆதலால் யாவரும் சமதர்ம ஞானத்தைப் பெறுங்கள். சமத்துவத்துடனும் மானத்துடனும், மனிதத் தன்மையுடனும், சுயமரியாதையுடனும் சுதந்திரத்துடனும் வாழ்வதற்கு வழிதேடுங்கள் நமது இயக்கவேலைகள் நாடு முழுதும் பரவவேண்டுமானால் தியாகபுத்தியும், சுத்த இரத்தமுள்ள வீர வாலிபர்கள்தான் முன்வந்து கடனாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு மகாநாட்டு வரவேற்புக் கழகத்தாருக்கும் மகாநாட்டுப் பிரதிநிதிகட்கும் பொதுஜனங்கட்கும் நன்கு கூறி தனது முடிவுரைப் பிரசங்கத்தை முடித்தார்.

தோழர். அ பொன்னம்பலம்அவர்கள் மகாநாட்டுக்குப் பிறகு நமது எதிர்கால வேலை" என்பது பற்றி பேசிவிட்டு 'யாவருக்கும் மகாநாட்டை சிறப்பாக முடித்துக் கொடுத்தமைக்கு நன்றி கூறி முடித்தார்.

மகாநாட்டுக் காரியதரிசி தோழர் சி. முருகன் அவர்கள் மகாநாட்டின் சார்பாக எல்லோருக்கும் நன்றி கூறினார். இத்துடன் மாலை 5-மணிக்கு மகாநாடு இனிது முடிவடைந்தது. மகாநாடு இறுதிவரை போலீஸ் சப் இன்ஸ் பெக்டரும் சர்க்கிள் இன்ஸ் பெக்டரும், மெஜிஸ்ட்ரேட்டும், போலீஸ் சேவகர்களும், இருந்துவிட்டுச் சென்றார்கள். மகாநாடு பிற்பகல் நிகழ்ச்சியிலிருந்து எவ்வித குழப்பமும், எதிர்ப்பு மில்லாமல் அமைதியாகவே முடிவடைந்தது.

### சேலம் சமதர்மப் பொதுக்கூட்டங்கள்.

17-2-31 மாலை சேலம் சுயமரியாதைப்பார்க்கில் 'காந்தீயமும்' 'சமதர்மமும்' என்ற விஷயத்தைக் குறித்தும்; 28-2-31 மாலை சேலம் விக்டோரியா மைதானத்தில் 'மனித வாழ்க்கையும், சமதர்மமும்' என்பது பற்றியும் 29-2-31 மாலை எழுத்துக்கார தெருவு சமதர்ம சங்க ஆரம்பக் கூட்டத்தில் "தொழிலாளர்களும், சமதர்மமும்" என்ற பொய்ள் பற்றியும் 30-2-31 மாலை அரிசி பாளையப் சமதர்ம வாலிபர் சங்கத்தில் "வாலிபர்களும் சமதர்மமும்" என்ற விஷயத்தைக்குறித்தும் தோழர்கள் ப. ஜீவானந்தம், எஸ். வி. லிங்கம் முதலியவர்கள் மிக உர்ச்சாகத்துடனும், உணர்ச்சியுடனும் நீண்ட விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். நான்கு நாட்களாக விடாது செய்த சமதர்ம முழக்கத்தால் நகரெங்கும் சமதர்மப்பேச்சாக இருக்கிறது.


நமது புதிய வெளியீடு.

தோழர் சே. நரசிம்மன் எம். ஏ.
அவர்களால் எழுதப்பட்ட

போல்ஷ்விக் முறை.

என்ற தக்கவாத நூலை
நீங்கள் படிக்க வேண்டாமா? அப்படியானால்
தனிப்பிரதி விலை அணா ஒன்று தான்

"குடி அரசு" பதிப்பகம், ஈரோடு.




'சுந்தரி ஸ்னோ.'

ஒரு சுந்தரிஸ்னோ வாங்குவோருக்கு
ஒரு சைதுட்டை இனும்.

சுந்தரி ஸ்னோ தோலைப் பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும், பிரகாசயாகவும் செய்வதோடு முகத்தில் உண்டாகும் வேர்வைக்கட்டி, பரு, மரு முதலிய தோல்வியாதிகளையும் போக்கி தோலுக்குப் புத்துயிர் அளிக்கிறது. நறுமணம் கமள்வது. விலை மலிந்தது.

ஏஜண்ட்:- K. V- R. A.
அடைக்கப்ப செட்டியார்
52-பந்தர் தெரு, சென்னை.

## குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

### இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R, P. B. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

விலை அணா 8.

### லெனினும் மதமும்.

இது பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயப்பாகும், விலை அணா 4.

### பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

### கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைம்பிய நூல். விலை அணா 4.

### கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

### இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

### ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலிய... மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்... கம்.

### தர்ம பரீக்ஷை.

இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணா 3.

### மேயோ கூற்று.

தோழர் C. A. அப்பாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.

விலை அணா 3.

### பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

## பகுத்தறிவு வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, ... தல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத் தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ... ய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும் விலை அணா ...

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துககாட்டப்பட்டிருக்கிறது. விலை அணா ...

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்சசி நூல். விலை அணா ...

### மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா ...

### கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல் வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய மேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ... பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்த்து... 100 பக்கங்கள் கொண்டது.

... ளுக்குச் ...

... எ...

### நான் சம்ச...

இந்நூல் ராபர்ட் ஜி. ... இதில், தான் கடவுளைப்பற்றிக் ... தற்குரிய காரணங்களைத் தெள்ள... யிருக்கிறார்.

புத்தகங்கள் வேண்டுவோர் பு... ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக ...

**பகுத்தறிவு ... பதிப்பகம் லிமிட்டெட், ...**

டிக்கட் 1க்கு விலை

ரூ.

4—0—0



மியூட்சுவல் கிளப்

டெர்பி

டிக்கட்டிற்கு பணம்பெற முடிவு தேதி 15-5-34.

6—6—34.

முதல் பரிசு பெற்றவர்.

எல்லா விடங்களிலும் எமது சார்பாக டிக்கட்டுகள் விற்க ஏஜண்டுகள் தேவை.

அதிகாரம் பெற்ற மியூட்சுவல் கிளப் ஏஜண்டு:—

**S. K. வரதராஜலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா S. I.**


வெளிவந்து விட்டது!

நமது புதிய பிரசுரங்கள்!!

# சோஷியலிசம்.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிப "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணு 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணு. தனிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

50 காப்பிகள் 1—4—0. 100 காப்பிகள் 2—0—0. 500 காப்பிகள் 8—0—0. தபால் செலவு வேறு.

## போல்ஷ்விக் முறை.

விலை அணு 1. தனிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

...னே...

...ம், ஈரோடு.


...ளது.

...கொடுக்கப்படும்.

...ாப்பிட்டும் தீராத வியாதிகள், குஷ்டம், க்ஷய... ...மம், இருந்தால் இதில் அவசியம் குணமாகும். இ... ...த எல்லா ஔஷதங்களும் கிடைக்கும்.

தாப... ...அனுபானத்துடன் $\frac{1}{2}$ மண்டலம் ரூ. 25. ஏழைகளுக்கு...

தானக... ...அனுபானத்துடன் $\frac{1}{2}$ மண்டலம் ரூ. 25. ஏழைகளுக்கு ரூ. 12-8-0.

ஆர். எம். நாராயணசாமி,
தன் மந்திரி வைத்தியசாலை, பழனி.



**The Right of Temple Entry.**

By.

*P. Chidambaram* **B. A., B. L. M. L. A.**

**Price Re. 1. Only.**

*Copies can be had of:-*

"Kudi Arasu" Publishing House, Erode.
R. B. P. Society Ltd., Erode.


உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் ஈ. வெ. கிரு...ஷ்ணசாமி அவர்களால் வெளியிடப்பட்டது.